தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 23-11-57 | சனிக்கிழமை | இதழ் 21

கருஞ்சட்டை

Dr. மா. இராசமாணிக்கனார்
M.A.M.O.L.Ph.D

சங்க காலத்தில் தமிழர்கள் மிகச் சிறந்த வாழ்வு வாழ்ந்தனர். காதல், வீரம், அன்பு, அறம் சிறந்திருந்தன. வந்தாரை எல்லாம் வாழ வைத்தனர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என வாழ்ந்தனர். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற திருமூலர் திருமந்திரத்திற்கேற்ப ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். அகநானூறும், புறநானூறும் காதலுக்கும் வீரத்திற்கும் எடுத்துக்காட்டுகளாக இன்றும் திகழ்கின்றன. திருக்குறள் உலகத்திற்கே வழிகாட்டி நூல். சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் போரிட்டது நம் வீட்டில் நடைபெறும் அண்ணன், தம்பி சண்டை போன்றது. உரிமைக்காகப் போரிட்டனர். ஆயிரம் இங்குண்டெனில் அங்கியர்வந்து புகல் என்ன நீதி? ஆனால் அவர்கள் வடவருக்கோ, பிறருக்கோ அடிமையாகவில்லை. வீர வாழ்வு வாழ்ந்தனர். வீரத்தால் எவரும் தமிழ் மன்னர்களை வீழ்த்தவில்லை. எந்த வடநாட்டு மன்னனாலும் தமிழகத்தை வெல்ல இயலவில்லை. கலிங்கம் வரை வென்ற—இந்தியத் துணைக் கண்டத்தையே கட்டி ஆண்ட அசோகனால்கூட தமிழகத்தை வெல்ல முடியவில்லை. அசோகனின் மைசூர் கல் வெட்டுகூட 'எனது நண்பர்களாகிய தமிழக மன்னர்களின் ஒத்துழைப்புடன் தமிழகத்திற்கு பௌத்த பிரசாரர்களை அனுப்பியுள்ளேன்' எனக் கூறுகிறது. கல் வெட்டிலிருந்து நமக்கு நிறைய ஆதாரங்கள் கிடைக்கின்றன. அனைவரும் இதை உணர வேண்டும். சங்க காலத்திலிருந்து தமிழ் மக்களுக்கு ஊட்டப்பட்ட வீர உணர்வு-மான உணர்வு அவர்களது வீர வாழ்வுக்கு உறுதுணையாக இருந்தது.

4-ம் நூற்றாண்டில் வடநாட்டு மன்னர்களை வென்றுஇமயத்தில் கொடி பொறித்த தமிழ் மன்னர் வீரம், 1000 ஆண்டுகளுக்குப் பிறகு 14-ம் நூற்றாண்டில் மாலிக்காபூர் படையெடுத்து வந்து மதுரையில் பாண்டியர் கட்டிய கோயில்களை இடித்து, நாட்டின் பகுதிகளைச் சூறையாடியபோது எங்கே போயிற்று? இடைக் காலத்தில் தமிழகத்தில் என்ன நடந்தது? வந்தாரை வாழ வைக்கும் நல்ல உள்ளம் கொண்ட தமிழன் ஏன் தாழ்ந்தான்? இதை நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும். முகம் சுளித்துப் பயனில்லை. உண்மையை உணர வேண்டும். நமது உள்ளம் மலர வேண்டும். வாழ்ந்த தமிழகம் எப்படியோ வீழ்ந்தது. ஏன் வீழ்ந்தது? எப்படி வீழ்ந்தது? அதைத்தான் நாம் ஆராயவேண்டும். வெளியிலிருந்து வந்தவர்களுக்கு ஆற்றங்கரை ஓரத்திலே தங்குவதற்கு நல்ல வசதியான இடத்தைத்தான் கொடுத்தார்கள் தமிழர்கள். ஆனால் வந்தவர்களுக்கு நல்ல உள்ளம் இல்லாமையால், தமிழர்களிடம் தகாத கொள்கைகளையும், ஜாதி, மத பேதங்களையும் புகுத்திவிட்டனர். ஜாதி என்ற சொல்லே, தமிழில், தமிழ் இலக்கியத்தில் இல்லை. ஜாதி நம்மிடமிருந்திருந்தால் அச்சொல்லும் தமிழில் இருந்திருக்கும். சங்க காலத்தில் இருந்த நான்கு பிரிவும் தொழிலின் அடிப்படையில் அமைந்தது. உயர்வு, தாழ்வு கிடையாது. "ஒன்றே குலம்" என்ற அடிப்படையில் தமிழர்கள் வாழ்ந்தனர். பறையர் என்றால் பறை அறிவிப்பவர்கள்—அரசர்களின் ஆணையை மக்களுக்கு அறிவிப்பார்கள் எனப் பொருள்படும். வேளாளர்களே நாட்டின் உயிர்நாடி. படையை ஆட்சி நடத்திச் செல்பவர்கள் - புரிபவர்கள் படையாட்சிகள் - நாயகர்கள், சேனைத் தலைவர்கள், என்னும் தொழிலின் அடிப்படையின் பிரிவு உண்டு. இவர்களெல்லாம் இன்று, தாழ்த்தப்பட்டவர்களாகவும், பிற்படுத்தப்பட்டவர்களாகவும் ஆக்கப்பட்டு விட்டார்கள். இவ்வேற்றத் தாழ்வெல்லாம் ஒழிக்கப்பட்டு தமிழர்கள் அனைவரும் ஓர் இனமாக ஒன்றுபட வேண்டும். தலைமையாசிரியர் வேலை செய்பவரை ஹெட்மாஸ்டர் (Head-master) சாதி என்றா நாம் அழைக்கின்றோம்? அம்மாதிரி சாதி உண்டா? அதேபோல ஆர். ஐ. (Revenue Inspector) என்ற சாதி உண்டா? (ஒரே சிரிப்பு) இம்மாதிரி சாதி எப்படிக் கிடையாதோ, அதேபோல் அன்றும் சாதி கிடையாது.

நமது மொழியில் வேண்டத்தகாத வடமொழிச் சொற்கள் புகுத்தப்பட்டுள்ளன. 'சோறு' சாதமாக மாறிவிட்டது. மகிழ்ச்சி எனும் அழகிய சொல் நமக்கு எவ்வளவு உணர்ச்சியை ஏற்படுத்துகிறது. "சந்தோஷத்தில்" அவ்வுணர்ச்சி ஏற்படவில்லை. அத்துடன் என்ன "தோஷம்" அது? தவறான அர்த்தத்தைக் கொடுத்துவிடுகிறது (சிரிப்பு) தமிழில் தக்க சொற்கள் ஏராளமாக இருக்கும்போது பிறமொழிச் சொற்களைப் புகுத்துவது தகாது. வேண்டும் என்றே பிறமொழிச் சொற்களைச் சிலர் கையாளுகின்றனர். இது தவறு. இது அம்மொழிமீதும் அம்மொழிகளையே பயன்படுத்துவோர் மீதும் பெரும் காழ்ப்பைத்தான் ஏற்படுத்தும். வேண்டாம் இந்தத் தவறான போக்கு என்று எச்சரிக்கின்றேன். நாடு உள்ள நிலைமையில் அச்சிறு சமூகம் திருந்துவதே நல்லது. தாய்மொழியைத் தமிழாகக்கொண்டு தமிழக சமுதாயத்துடன் ஒன்று கலந்து...சம உரிமையுடன்... உயர்வு தாழ்வின்றி வாழ்வதே சிறந்தது. சென்றதை மறந்து திருந்துவதே காழ்ப்பிற்குப் இடந்தராது. இல்லாவிடில் நாட்டில் புரட்சி ஏற்பட்டுவிட்டால் யாராலும் தடுக்க முடியாது.

வடக்கிலிருந்து வந்த அகஸ்தியன் தமிழை உண்டாக்கினான், என ஓர் புளுகைக் கட்டிவிட்டனர். ஒரு தனி மனிதன் ஒரு மொழியை உண்டாக்க முடியுமா? இதை அறிவுள்ள மனிதன் ஒப்புவானா?. "என்றுமுள்ள தென்றமிழை" இந்த அகத்தியனும் கற்றுத் தேறி அதன் சிறப்பை எடுத்துக் கூறி தனக்கும் புகழ் தேடிக்கொண்டான். தமிழ் மொழி இன்று நேற்றுத் தோன்றிய மொழியல்ல. 2000 ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியம் எனும் இலக்கணம் அமைந்த மொழி...தமிழ் மொழி. இலக்கியம் கண்ட பின்னரே அதற்கு இலக்கணம் அமைக்கப்படுவது மரபு. மனிதன் முதன் முதலில் சைகையால் பேசி, பின்னர் மொழி உண்டாக்கி பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகு பண்பட்டு இலக்கியமும் அதன் பிறகு பல ஆண்டுகளுக்குப் பிறகு இலக்கணமும் இயற்றப்படுகின்றன என்பது மொழி ஆராய்ச்சியாளர்கள் முடிபு. தமிழர் தோன்றிய காலம், தமிழ் மொழி தோன்றிய காலம் இவைகளை இவ்வடிப்படையில் ஆராய்ந்தால் வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்ட காலம் எனத் தெற்றென விளங்குகின்றது. உலகம் முதன் முதலில் தோன்றிய காலமுதலே தமிழனும் வாழ்கின்றான். குகையில் வாழ்ந்து, பிறகு மண் வீடு கட்டி அதன் பின்னர் கல் கட்டிடம் கட்டி வாழும்

கன்னித் தமிழ் வாழ்க - என்றால்

கருப்புச்சட்டை மாட்டுவோம் என்கிறார்கள்!

இன்றைய நிலைவரை படிப்படியாக இயற்கையான வளர்ச்சி பெற்றிருக்கின்றான். உலகில் மற்ற நாடுகளில் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில், தமிழன் திருக்குறள் போன்ற அற நூற்களையும் இயற்றி உயர்ந்த நாகரிகமுடன் வாழ்ந்தான். உலகில் பழமையான மொழிகளை 8 வகையாகப் பிரிக்கின்றனர், மொழிநூல் வல்லுனர்கள். அவை யாவன: தமிழ், சீனமொழி, ஹிப்ரு, லத்தின், கிரீக், சம்ஸ்கிருதம் (அல்லது வடமொழி.) இவைகளில் நான்கு மொழிகள் வழக்கின்றி அழிந்துபட்டன... இறந்த மொழிகள் என அழைக்கப்படுகின்றன. தமிழும் சீன மொழியு மட்டுமே வழக்கில் உள்ளன... உயிருடன் வாழ்கின்றன. தமிழ் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உண்டான மொழி. தொடர்ந்த இலக்கிய வளம் நிறைந்தது. இன்றும் கோடிக்கணக்கான மக்களால் பேசப்பட்டு உயிருடன் வாழுகின்ற மொழி நமது... தாய் மொழி... தமிழ்.

பல சங்க கால தமிழ்ச் சொற்களுக்கு பொருள் அறியாமல் இன்று தமிழர் வாழ்வதுவருந்தத் தக்கது. இன்று 'குடவோலை' என்றால் பெரும்பாலோர்க்குப் புரியவில்லை. சங்க காலத்தில் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டிற்கு அப்பெயர் வழங்கியது. 1957-ல் தேர்தல் நடைபெறுவது ஆச்சரியமில்லை. அன்றே நமது முன்னோர்கள் இம்முறையைக் கையாண்டனர். இன்னும் எவ்வளவோ சொல்லலாம் பல அழகிய சங்ககாலத் தமிழ்ச் சொற்கள் நாட்டின் பெரும் பகுதியில் வழக்கிலில்லை. அதுவும் நகர்ப்புறங்களில் வழக்கிலில்லை. ஆனால் இன்னும் கிராமப்புறங்களில் அவை வழக்கில் உள்ளன. நான் சமீபத்தில் காவிரிப்பூம்பட்டினம் சென்றிருந்தபோது கடற்கரை அருகே சென்றுபார்வையிட்டேன். அங்கு மக்கள் சந்தடியில்லை. அங்கு கடற்கரை ஓரத்தில் நின்ற ஓர் பெண்மணியை நோக்கி இவ்விடங்களில் யாரும் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள்... தோண்டிப் பார்த்தார்களா என வினவினேன். அப்பெண்மணி "இவ்விடங்களை யாரும் அகழ்ந்து பார்க்கவில்லை" எனக் கூறினார். மீன் பிடிக்கும் தொழில் புரியும் அம்மக்களை இன்ற சமூகம் தாழ்த்தப்பட்டவர்களாக்கியுள்ளது. ஆனால் அவர்களிடம் தான் சங்க காலத் தமிழ்ச் சொற்கள் இன்றும் பேச்சு வழக்கத்தில் உள்ளன. இச்சொல்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்
போலத் தம்மை இகழ்வார்ப்
பொறுத்தல் தலை.

என்ற குறளில் திருவள்ளுவரால் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று பல சொற்கள் கிராம மக்களிடம் இன்றும் வழக்கிலுள்ளன.

தனக்குப் பொருள் புரியவில்லை என்பதற்காக சங்க நூற்களை ஒரு மூட்டையாய்க் கட்டி அதில் ஓர் கல்லையும் கட்டி கடலில் எறிந்துவிட வேண்டும் என்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் ஒரு தமிழர் துணிந்து கூறினார். அவர் கூற்றையும் இந்த நாடு கேட்டுக்கொண்டு உணர்ச்சியின்றிக் கிடந்தது. அவர்களும் இந்நாட்டில் வாழ முடிந்தது. ஆனால் தமிழ் அன்னைக்கு அது பொறுக்க முடியாமல் அந்தப் பெரியவரை தமிழகத்திலிருந்து வானுலகிற்கு விரைவில் அனுப்பிவிட்டாள் போலும் தமிழுக்கு துரோகம் நினைத்தவர்கள் அதிக நாட்கள் வாழ்ந்ததில்லை.

மற்றொருவர், சேரன் செங்குட்டுவன் இமயத்திற்குச் சென்றிருக்க முடியாது. திருப்பதிக்கு வேண்டுமானால் சென்றிருக்கலாம். நமது மாணவர்கள் திருப்பதி, பழனிபோன்ற மலைப் பிரதேசங்களுக்கு சென்றால் கரியாலும் சுண்ணாம்பாலும் தங்கள் பெயர்களை எழுதிவருவதுபோல் சேரன் செங்குட்டுவனும் எழுதி வந்திருப்பான். இதைப் போய் பிரமாதப்படுத்தி இமயம் சென்றதாக புகழ்கின்றார்கள் என்று வேலூரில் நடைபெற்ற ஓர் கூட்டத்தில் எவ்வித ஆதாரத்தையும் காட்டாமல், தானும் ஆராயாமல் கூறினார். அவரும் இத்தமிழ் நாட்டில் உயிருடன் உலவ முடிகிறது.

தமிழ்த் துரோகிகளை தமிழ்த் தாய் அதிக நாட்கள் விட்டு வைத்ததில்லை. தமிழ்நாடு விழிப்புற ஆரம்பித்துவிட்டது.

விவேகானந்தா கல்லூரியில் பயில்பவர்கள் 100-க்கு 95 பேர் ஓர் சிறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள். நான் அக்கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றிய பொழுது என்னிடம் பல மாணவர்கள் கற்றுத் தேர்ந்தார்கள், பட்டம் பெற்ற பிறகு பிறப்பின் காரணமாக தங்களுக்கு வேலைகிடைக்கவில்லை என வருந்தி பல மாணவர்கள் என்னிடம் கூறினர். அதேபோன்று தியாகராயர் கல்லூரியின் வேறொரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மையாகப் பயில்கின்றனர். என்று கூறப்படுகின்றது. அங்கு பட்டம் பெற்று வேலை தேடும் மாணவர்களுக்கும் பல காரணங்கள் கூறி வேலை கிடைக்காமல் மறுக்கப்படுகின்றது என அறிகிறேன். அலுவலகத்தில் தலைமை அதிகாரி ஒரு சமூகத்தைச் சேர்ந்தவராகவும், மற்றும் அலுவலர்கள் வேறு சமூகத்தவராகவும் இருந்தால் கொடுமைகள் நிகழ்வதாக எங்கும் புகார்கள்கிளம்புகின்றன. இந்நிலை வளர்ந்தால் நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டுவிடும். அதற்காக உண்மையை மறைத்துப் பயனில்லை. ஒரே சமுதாயமாக தமிழர்கள் ஒன்று சேர வேண்டும். உயர்வு, தாழ்வு மனப்பான்மை ஒழிய வேண்டும். அன்றுதான் நாடு உயரும். சங்ககால வாழ்வு மலரும்.

சென்னையிலிருந்து நான் மதுரை தியாகராச கல்லூரியில் பணியாற்ற வந்தேன். என்னிடம் 600-க்கு மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். ஓர் நாள் மதுரை மீனாட்சி கோவிலில் உள்ள ஓவியங்களை பார்த்து வருவோம் என்று எல்லா மாணவர்களையும் சனிக்கிழமை மாலை கோவிலிற்கு வரும்படி கூறினேன். நான் அங்கு சென்றேன். மாணவர்கள் யாரும் அங்கு வரவில்லை. அடுத்த வாரமும் அதேபோன்று கூறினேன். மீண்டும் மாணவர்கள் வரவில்லை. திங்கட்கிழமை கல்லூரி ஆரம்பமானவுடன் நானே மாணவர்களை இதுபற்றிக் கேட்டேன். அவர்களில் துணிவுள்ள ஒரு மாணவன் எனக்கு பதில் கேள்வி போட்டான். மீனாட்சி கோவிலைக் கட்டியவர்கள் யார்? பாண்டியர்கள் (தமிழர்கள்) என்றேன். மீண்டும் யாருடைய பொருளால் கட்டப்பட்டது? "தமிழ் மக்கள் தந்த வரிப் பணத்திலிருந்து கட்டப்பட்டது" என்றேன். தமிழர்களால் கட்டப்பட்ட ...தமிழர்களின் வரிப் பணத்தால் கட்டப்பட்ட மீனாட்சி கோவிலில் தமிழ் மூலம் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றனவா? தமிழ் மரபு அனுசரிக்கப்படுகின்றதா? "இல்லை" என்றேன். ஆகையால்தான் நாங்கள் வர இயலவில்லை என்று அம்மாணவன் கூறினான். "சரி" என்றேன்.

தமிழ் மாணவர்கள் வணக்கம் என்று கூறினால் அவர்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர். தமிழாசிரியர்கள், சங்க நூற்களை கற்றறிந்து எடுத்துக் கூறினால்...அவ்வாழ்க்கை முறை தமிழகத்தில் மீண்டும் வர வேண்டும் என்று எடுத்து இயம்பினால் மந்திரிகளிலிருந்து அவர்களைச் சந்தேகிக்கின்றனர். அவர்கள் கூறிய கருத்தைக் கவனிக்காமல் அவர்களுக்கு வேறு நிறச் சட்டை மாட்டுகின்றனர். வேறு வேறு இயக்கங்களைச் சார்ந்தவர்களோ என ஐயுறுகின்றனர். உண்மையை யாரும் மறைக்க முடியாது.

தமிழ்நாட்டு மந்திரிகளுக்கோ, தாயகத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்கக் கூட இன்னும் உணர்ச்சி ஏற்படவில்லை. அதேபோன்று பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழ் உணர்ச்சி இல்லை. எனது நண்பர் ஒருவர் — காங்கிரஸ் எம். எல். ஏ. சட்டமன்ற உறுப்பினர். அவரை நான் நாட்டிற்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்கவேண்டும் என்ற தீர்மானம் வந்தபொழுது என்ன செய்தீர்கள் என்றேன். அவர் அதை ஆதரிக்கும் எண்ணம் எனக்கும் உண்டு, ஆனால் கட்சிக் கட்டுப்பாடு அது-இது என்னை வாக்களிக்க முடியாமல் தடுத்துவிட்டது என்றார். எவ்வளவு வருந்தத்தக்க செயல் இது.

தமிழ் நாட்டில் தமிழில்தான் எல்லா நிகழ்ச்சிகளும் நடைபெற வேண்டும். தமிழ் மக்கள் சங்க கால நூல்களை நன்கு கற்று உணரவேண்டும். கட்டாயப்படுத்தி வேறு எம்மொழியையும் நம்மீது திணிக்க அனுமதிக்கக் கூடாது. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற சங்க காலத் தமிழ் தமிழர் வாழ்வு வேண்டும், தமிழகத்தில் மலர வேண்டும் - மலர அனைவரும் பணிபுரிய வேண்டும். நாட்டு நிலையை உணராமல் இருப்பவர்களுக்கு மீண்டும் எச்சரிக்கிறேன். ஜாதியை எந்த பிரமனும் கூரான பென்சிலால் நமது தலையில் அழுத்தி எழுதிவிடவில்லை. மனிதனால் மாற்றக் கூடியதுதான். சங்ககால தமிழகத்தில் ஜாதி இல்லை. இன்றைய தமிழகத்திற்கும் ஜாதி வேண்டாம். நாடு முன்னேறிச் செல்கின்றது. அதற்கு ஆக்கம் கொடுங்கள். அதை விடுத்து பிற்போக்கு சக்திகளுக்கு இடம் தராதீர்கள் - இடந்தந்தால் உங்களுக்குத்தான் அது கேடு பயக்கும். உங்களால் நாட்டு முன்னேற்றத்தைத் தடுக்க முடியாது. அனைவரும் ஒற்றுமை பெற்று உயர்வு தாழ்வை மறந்து ஓர் ஒப்பற்ற தமிழ் சமுதாயத்தை அமைப்போம்.

—பேச்சைத் தொகுத்தவர்
நாகை. அ. ராமசாமி.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் : அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 4 ‖ 23—11—57 ‖ இதழ் 21

மூன்று தலைவர்கள்

பெரியார்

பசும்பொன் முத்துராமலிங்கம் கைது செய்யப்பட்டார்.

அதுதான் சரியான காரியம் என்று பெரியார் சொன்னார்.

பெரியாரின் பேச்சு, காங்கிரஸ் அரசாங்கத்திற்குப் பக்கபல மாக இருந்தது.

காமராஜர் சர்க்கார் எதைச் செய்தாலும் பெரியார் ஆதரிக்கத் தான் செய்வார் என்று பொதுமக்களில் ஒரு சாரார் நினைத்தார்கள்.

பெரியாரின் உள்ளம் எப்படியோ நாமறியோம் - ஆனால் ...டனடியாக சாதி ஒழிப்புப் போராட்டத்தில் பெரியார் ஈடுபட ஆரம்பித்துவிட்டார். காங்கிரஸ் சர்க்காரை பலமாகக் கண்டித் ...ார்.

காமராசர்

காமராஜ் பிரதமரானதிலிருந்து பெரியார் தன்னை ஆதரித்து ...ருவது காமராஜருக்குத் தெரியாத உண்மையல்ல. அதைப் ...பாலவே முதுகுளத்தூர் கலவரத்தில் அரசாங்கத்தை ஆதரித் ...ார் பெரியார். சர்க்கார் சார்பில் நன்றிகூடத் தெரிவிக்கவில்லை. ...தற்குள்ளாக அதே சர்க்கார், அவர்மீது நடவடிக்கை எடுக்க ...ர்ந்தது வருந்தத்தக்கதும் - எதிர்பாராததுமாகும் என்பது ...ண்மைதான். என்ன செய்வது?

காமராசர் நிலைமை என்ன?-இப்படிப் பலர் நினைத்தார்கள்.

பெரியார்மீது வழக்குப் பதிவானது. விசாரணையும் நடக்கிறது.

அண்ணா

தமிழ்நாட்டு அரசியலில் நெடுநாட்களாக முக்கிய அங்கம் ...த்துக்கொண்டு வரும் இரு பழம்பெருந்தலைவர்கள் பின்னிப் ...ணந்து பொதுமக்களைத் திணறடித்துக் கொண்டிருக்கும்போது, ...மு. க. என்ன செய்யப்போகிறது என்று சிலர் கேட்டார்கள். ...ட்டவர்கள் பொதுமக்கள்கூட அல்ல; அரசியலையே கரைத்துக் ...த்துவிட்டதாகவும், இனி களத்தில் கால்வைத்தால் நாடு ...ங்காது என்றும் தங்களுக்குள்ளேயே எண்ணி இடிந்துபோன ...ப் பெரியவர்கள்' தங்கள் வீட்டு மாட்டுக்கொட்டத்தில் அமர்ந்து ...ண்டு கேட்டார்கள்.

"அண்ணாதுரை,

முதல்நாள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்துப் ...னார்;

"ஆனால் இரண்டாம் நாள் யாரும் எதிர்பார்க்காத வகையில் ...ளி நடப்பு' செய்தார்,

"அதே அண்ணாதுரை தேசீயக் கொடி, சட்டப்புத்தக எரிப்பு ...தா விவாதத்தில் முழுமூச்சாகக் காங்கிரசை எதிர்க்கிறார். ...ன அண்ணாதுரையைப் புரிந்துகொள்ள முடியவில்லை."

—இப்படிப் பல இடங்களில் பேசினார்கள்; காங்கிரஸ்காரர் ...பேசிக்கொண்டார்கள்.

கோட்டைக்குள் எம். எல். ஏ. தான் என்றாலும், அதற்கு ...ியே மக்கள் தலைவராக இருக்கும் அண்ணா அவர்கள் அவர் ...க்கெல்லாம் தெளிவுபடுத்தும் வகையில் சரியான விளக்கத் ...தந்துள்ளார்கள். அது இது;

"கோலார் தங்கச் சுரங்கத்தில், நேரே கீழே இறங்கினால் நாம் ...த்தைப் பார்க்கமுடியாது; பாறை எந்தப் பகுதியிலிருக்கிற ... அந்தப் பகுதியில்-தங்க ரேகை எங்கே ஓடுகிறதோ அங்கு ...டிய பிறகுதான் தங்கத்தைக் காணமுடியும். உண்மையும் ...த்தான். தங்கரேகை நேராக இல்லாமல் வளைந்துதான் ...ும்; அப்படித்தான் உண்மையும் வளைந்து வளைந்து செல் ... அது ஓடும் பக்கத்தைக் கண்டுபிடிக்கும் திறனும் மனப் ...கும் வேண்டும். உண்மை என்னும் அந்தத் தங்கரேகை ...த்தான் தி. மு. கழகம் செல்கிறது."

பல்சுவை!

கடந்த சில நாட்களாக, தினஇதழ்களில் இந்தி எதிர்ப்புப் பற்றிய செய்திகளே அதிகமாகக் காணப்படுகின்றன. அவை களில் சில சுவையான செய்திகள் இங்கே தொகுத்துத் தரப் பட்டிருக்கின்றன. நீங்கள் படித்துவிட்டு பக்கத்தில் இருப் பவர்களையும் படிக்கச் சொல்லுங்கள். சிரிப்பு வந்தால் சிரிக்க லாம். கோபம் வந்தால்...யாரை நொந்துகொள்வீர்களோ?

(ஆ-ர்)

வீரம்

கேர் அறிக்கையை ஆயும் பாராளுமன்றச் சிறப்புக்குழுவின் நடவடிக்கை இரகஸ்யமாக நடப்பதைக் கண்டித்து, அந்தச் சிறப்புக் குழுவில் இடம் பெற்றுள்ள திரு. அந்தோனி பிராங்க் என்பார் 18-11-57 நாள் பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை விடுத்துள்ளார். அது வருமாறு: "சிறப்புக்குழுவின் நடவடிக்கைகள் இரகசியமாக நடப்பது பொருத்தமற்றதும் களங்கத்தை உண்டுபண்ணுவது மாகும். எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சிறப்புக்குழுவின் அறிக்கையை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டாலும், அப்போது மாறுதலுக்கு ஒப்பமாட்டார்கள். குழுவின் நடவடிக்கை பகிரங்க மாக நடந்தால்தான் அவ்வப்போது நடக்கும் விவாதத்தால் பொது மக்களின் எண்ணங்கள் எப்படி மாறுபடுகிறது என்பதை அறிய இயலும். இந்தக் குழுவிலோ இந்தி ஆதரவாளர்கள்தான் அதிகம். நாட்டுமக்களை அதிகம் பாதிக்கும் இந்தப் பிரச்சனை குறித்து இரகசியமாக விவாதிப்பது நல்லதல்ல." இந்தக் குரல் இந்தி வெறியர்கள் செவிகளில் விழுமா?

நகைச்சுவை

18-11-57 ம் நாள் டில்லி ராஜ்ய சபையில் விவாதத்தின்போது உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த திரு. அமோலக் சந்த் இந்தியில் ஒரு கேள்வி கேட்டாராம். அதிகமாக சமஸ்கிருதம் கலந்து பேசிய தால் அந்த இந்தியை நேருப் பண்டிதர் புரிந்துகொள்ள முடியு வில்லையாம். பின் உறுப்பினர் வினாவை ஆங்கிலத்தில் சொன்னபின் பதிலளிக்கப்பட்டது.

ஐயோ இந்தியே!

அச்சம்

18-11-57 ம் நாள் மெயில் இதழில் டில்லி நிருபர் இந்திபற்றி குறிப்பு ஒன்று தீட்டியுள்ளார். சென்னைத் தொடர்புள்ள செல்வாக் குள்ளவர் (அரசியல் வாதியா அதிகாரியா என்று குறிப்பிடவில்லை) தன்னிடம் கூறினதாகப் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"சென்னையில் காங்கிரஸ் அல்லாத கட்சி ஒன்று பதவிக்கு வருவதாகக் கற்பனை செய்துகொள்வோம். அந்தக் கட்சி இந்தி விஷயத்தில் மத்திய அரசின் சொற்படி கேட்காவிடில் என்ன நேரிடும்? இந்தியக் குடியரசுத் தலைவரே ஆட்சியைக் கைப்பற்றி ஓராண்டுக் காலம் நடத்துவார். மறுபடியும் தேர்தல் நடக்கும். மீண்டும் அதே கட்சி அதிகமான பலத்துடன் ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வது. இந்தியைப் பொருத்தமட்டில் சென்னை மக்களின் எண்ணத்தை மாற்ற இயலாது. எனவே இந்தப் பிரச்சனையில் மத்திய அரசு உண்மை நிலை அறிந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும்"

இதே கருத்தை அண்ணாகூட கடந்த தேர்தல் சமயத்தில் கூறியிருக்கிறார்.

தோல்வி

19-11-57 ம் நாள் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில், காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இந்தி குறித்து நடந்த விவாதம்பற்றி, டில்லி நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்.

"மொழிப் பிரச்சனைபற்றி சென்னை சட்ட சபையில் பகிரங்க ஓட்டிற்கு விடலாமெனத் தெரிகிறது. இது,காற்று எப்பக்கம் வீசுகிறது என்பதைக் காட்டுகிறது."

அவலம்!

டில்லியில் நடந்த காங்கிரஸ்காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இந்திபற்றியும் தேசீயக்கொடி எதிர்ப்புபற்றியும் விவாதம் நடக்கையில் சென்னை மாநில முதலமைச்சர் திரு. காமராசர் வாய் மூடி மௌனியாக வீற்றிருந்தாரெனப் பத்திரிகைகள் கூறுகின்றன.

ஐயோ தமிழகமே!

இதுதான் திராவிடநாடு

- 9 -

கா. அப்பாதுரையார்

தமிழர் இன வேறுபாடற்ற தன்மையே தமிழ்ப்பண்பு. அதுவே தமிழகம் கடந்து, தென்னக முழுவதும் பரந்து, தென்னகப் பண்பாய் இயங்கிற்று. இயங்குகிறது. என்றும் இயங்கும். இத்தமிழ்ப்பண்பு, தென்னகப்பண்பு உயிரற்ற தேக்கப் பண்பன்று. அது உயிர்ப்பண்பு, விசையார்ந்தபண்பு, தான் இன வேறுபாடு காட்டாததுடன் அது அமைவதில்லை. தன்னைச் சார்ந்த கிளையினங்கள், அயலினங்கள் எல்லாவற்றையும் அது அப்பண்பினுல் தன் வயப்படுத்தி ஒற்றுமை யூட்டவல்லது, ஊட்டி வந்துள்ளது. வருகிறது. தன்னுடன் இணைவுற்ற பின் அவற்றை முன்னிலும் பன்மடங்காக வளப்படுத்த வல்லது. இதனை நாம் வரலாற்றிலே பின்சென்று காணலாம்.

தமிழகத்துக்குள் சிவாஜியின் மரபினருடன் மராத்தியர் வந்து குடிபுகுந்தனர் தத்தம் தாய்மொழி பேணிக்கொண்டே. தத்தம் பழக்க வழக்கங்களுடனேயே, தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் அவர்கள் பல்வேறு தொழில்களிலும் இன்றும் முனைந்துள்ளனர். வீட்டில் பேசும் மொழியன்றி வேறெதுவும் இன்று அவர்களைத் தமிழர் சமுதாயத்திலிருந்து பிரித்தறிய உதவாது. இவர்கள் போலவேதான் சூரத்தருகிலிருந்து நடுஇந்தியா, கன்னடநாடு, தெலுங்குநாடு ஆகியவற்றிலெல்லாம் சுற்றி இறுதியில் மதுரையிலும் தமிழகத்திலும் குடியேறிய சௌராட்டிரர் தம் தாய்மொழி நீங்கலாக மற்றெல்லா மொழியிலும் தமிழரிடமிருந்து வேறு பிரித்தறிய முடியாதவராகியுள்ளனர். சௌராட்டிரத் தாயகம் இவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டால் பெருமையும் இறும்பூதும் எய்தும் வகைக்கு அவர்கள் முன்னேறியுள்ளதுடன், இக்காலம் வரை எழுத்தும் இலக்கியமும் இல்லாத நம் தாய்மொழிக்குத் தமிழகத்திலிருந்தே எழுத்தும் இலக்கியமும் உண்டுபண்ண ஆனப் பெருமை பேணும் பிரிவாய் உள்ளனர்.

விசயநகரப் பேரரசர் காலத்தில் தெலுங்கரும் கன்னடியரும் இது போலவே தமிழகத்தில் பரவி வாழ்ந்தனர்.

சென்ற நானூறு ஆண்டுகளுக்குள் தென்னகத்துக்கு உள்ளிருந்தும் அதன் எல்லையிலிருந்தும் தமிழகம் புகுந்த இவ்வினத்தவர் தத்தம் தாயகத்தில் வாழும் பழய உறவினரைவிடச் செல்வத்திலும் கல்வியிலும் வாழ்க்கை வளத்திலும் மேம்பட்டவர்களாக, தமிழகத்தின் வாழ்வில் வளமான பங்கு கொள்பவர்களாகவே உள்ளனர். அவர்களில் பலர் தமிழுக்காகப் பாடுபட, தமிழ்ப் புலமையிலும் ஆராய்ச்சியிலும் மேம்பட, தமிழுக்காகப் போராடக்கூடத் தயங்கியதில்லை. முதல் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் இத்தகையோர் பலர் தலைமையே வகித்துத் தமிழ்த் தியாகிகளாயினர்.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர், உருதுவைத் தாய்மொழியாகக் கொண்டவர், வங்கத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கூடத் தமிழகத்தில் உண்டு. இந்தி ஒழிப்பியக்கத்தில், அயல் ஆதிக்க மொழியாக வந்த தம் தாய்மொழியாகிய இந்தியை எதிர்த்து இவர்களில் சிலர் சிறை வாழ்வு வரை ஏற்றுள்ளனர்.

சேரசோழ பாண்டியர் ஆட்சியில் அராபியரும், யூதரும் சிரியமக்களும் பல்வேறு காரணங்களால் தென்னகக் கரையோரமெங்கும், கோவா முதல் காயல்பட்டினம் வரை பரவலாக வந்து குடியேறினர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயேசு பிரான் வாழ்ந்த காலத்திலேயே-அவர் சீடர் தூயதிருதாமசுடன் யூத சிரிய மக்கள் வந்து தம் சமயம் பரப்பிக் கோயில் குளம் கட்டி வாழ்ந்து வந்துள்ளனர். சென்னையருகிலுள்ள பறங்கிமலை இந்தத் தூய தாமஸ் பெயரால் இயங்குவதுடன், சென்னையின் தலை சிறந்த அரச பாட்டையும் (மவுண்டுரோடு) அப்பெயராலேயே வழங்குகிறது. சேர அரசர் இந்த யூத, சிரிய மக்களுக்குத் தனியுரிமைப் பட்டயங்கள் வழங்கியதன் பயனுக, இன்றளவும் சமயம் என்றுல் மட்டும் தனியுரிமையுடைய சிரிய கிரித்தவர்களாகவும், அஞ்சு வன்னத்தார் என்னும் பெயருடன் இஸ்லாமியர்களாகவும், மரக்காயர் அல்லது மரக்கலராயர் என்ற பெயருடன் தமிழ் வணிகர்களாகவும் சீதக்காதி போன்ற தமிழ்ப் புலவர்களாகவும் வள்ளல்களாகவும் வாழ்ந்து வந்துள்ளனர். பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பாண்டிய அரசியற் பேரவையிலேயே அராபியக் குடியேற்றத்தாரின் பேராளராக (பிரதிநிதிகளாக) அராபியரே இடம் பெற்று, அமைச்சரவையிலே ஆய்வுரையாளராகச் சிறந்து உரிமையுடன் விளங்கினர் என்று அறிகிறோம்.

இரண்டாயிரம் ஆண்டுகாளாகத் தமிழகம் வந்த இந்த அயலினத்தாரில் பலர் எவ்வகையிலும் தமிழரிடமிருந்து பிரிந்தறியமுடியாதவராகத் தமிழராகிவிட்டதன் மருமம்என்ன? சிலர் தம் பழய மொழி, சமயம், பழக்கவழக்கங்கள் ஆகிய சின்னங்களை இன்றும் பேணி வந்தாலும், தாம் அயலாரென்பதையே மறந்து, தமிழராக வாழ்வதன் மறை திறவு தான் என்ன? பலர் தம் பழய தாயகத்தை அயலினமாகக் கருதுமளவுக்கு, அவர்களால்கூட அவ்வாறு கருதப்படுமளவுக்குத் தமிழ் வாழ்வுடன் எப்படி ஒன்றுபட்டார்கள்?

எல்லா இனங்களுக்கும் தமிழர் இடம் தந்ததுடன் நில்லாது; அவரவர்களுக்கு முழுச் சமத்துவ உரிமை, இனப் பாதுகாப்பு, மொழிப் பாதுகாப்பு, உரிமைகள், குடியாட்சி உரிமைகள் வழங்கியதே இப்பொன்னுர் நிலைக்குக் காரணம் என்று காண்டல் அரிதன்று.

தமிழகத்திலுள்ள தெலுங்கர் தமிழ் மொழியைமட்டும் வளர்த்தவர்கள் அல்ல. தொலைத்தாய் இ[…] மான ஆந்திரத்தின் இலக்கிய[…] லும் அவர்கள் கொண்ட பங்கு […] தல்ல. தம் காலத் தமிழர் […] லாற்றை, தமிழகக் கலைவளங்க[…] அவர்கள் தெலுங்கில் எழுதி ஆ[…] திர வாழ்வையும் வளப்படுத்திய[…] ளனர். ஆந்திர மொழியில் […] முதல் 18-ம் நூற்றுண்டு வ[…] யுள்ள நாடகப் பேரிலக்கியம், உ[…] நடைப் பேரிலக்கியம் […]த்தி[…] முழுவதும் தமிழகத் தெலுங்[…] தமிழர் வாழ்வுபற்றித் தெலுங்[…] எழுதியவையேயாகும். தியாகரா[…] வளர்த்த தமிழிசை ஆதரவற்[…] தளர்ந்து அழிந்து வந்த தமிழி[…] கலையின் தெலுங்கு உருவமே[…] கும். தவிர, ஆந்திர முன்னேர் […] வினர் வாழ்வின் வளத்தைவி[…] உயர்வைவிட தமிழகத் தெலுங்[…] வாழ்வில் வளமும் அறிவும் சிற[…] வர்களாகவே இன்றளவும்விள[…] கின்றனர். தமிழக மராத்தி[…] அராபியர், சிரியர் நிலையும் இது[…] மராத்திய நாட்டு வாழ்விலே[…] அரபி நாட்டு வாழ்விலோ[…] அவர்கள் இவ்வளவு சிரிய […] அடைந்திருக்க முடியாது. தாழ்[…] தமிழகத்திலேயே அவர்கள் […] இது என்றுல், இனி வர இருக்[…] வாழ் தமிழ்த் தாயகத்தில் அவர்[…] பங்கு எவ்வளவு என்று எண்[…] மதிப்பிடல் அரிதே என்னலாம்.

தமிழகத்தில் வந்த அயலினத்[…] ரில் மிக மிகப் பழமையானவர்தா[…] 'ஆரியர்' என்று அடிக்கடி தம்மை[…] குறித்துக்கொள்ளும் கவிஞர்பார[…] யினத்தவரான பிராமணர், இ[…] களில் இருநூறு முந்நூறு ஆண்[…] கட்குமுன் வந்தவரும் உண்[…] இரண்டாயிர ஆண்டுகட்குமு[…] சங்க காலத்திலே தமிழகத்து[…] விருந்தினராக வந்து, பட்டயங்க[…] டனும் தனிச் சிறப்புரிமைகளு[…] னும் தமிழரசரால் போற்றப்[…] டவர்களும் உண்டு. வட[…] பிரகாரணத்தார், எண்ணு[…] வர், அறுவேலிகள் (ஆறுயி[…] தார்) முதலிய பெயர்கள் இன்று[…] அவர்கள் தனி வருசைச் சின்ன[…] களாக இயல்கின்றன. இவர்[…] வடக்கிலிருந்து வந்தவர்கள் எ[…] பதற்கு உண்மையில் அவர்[…] பெயர்களையும் வரலாற்று ஆதா[…] களையும் தவிர வேறு தெளிவுகா[…] டல் அரிது. அந்த அளவுக்கு ம[…] அயலினங்கள்கூடப் பெருத த[…] சிறப்புரிமையும் சமுதாய, ச[…] அரசியல் வாழ்வில் பங்கும் அ[…] கட்குத் தொடக்கத்திலிருந்தே த[…] பட்டிருந்தன.

தாழ்ந்த தமிழகத்தில், பிரிவுற்[…] தேய்ந்த தென்னகத்தில்கூட அ[…] கள் நிலை வாழ்வோங்கிய வடதி[…] யிலுள்ள அவர்கள் முன்னே[…] இன்றைய உறவினர் நிலையைவி[…] எவ்வளவோ மேம்பட்டது. அ[…] கட்குத் தமிழகத்திலும் தென்னக[…] திலும் இருக்குமளவு வாழ்க்[…] வசதி, கல்விவசதி, மக்கள் ஆதர[…] ஆகியவை அவர்களுடைய வ[…] திசை உறவினர்களுக்குக் கி[…]

— 10ம் பக்கம் —

இந்த ஆண்டு

★

தென்றல்
பொங்கல் மலர்

★

உயர்ந்த காகிதத்தில்
கிரௌன்-பெரிய அளவில்
தயாராகிறது!

★

விலை ரூ. 2

கொற்றவன் வருந்த(க்) கொதித்தது தமிழ்நெஞ்சம்!

அம்மா!”

“என்ன அப்பா?”

“பசிக்கிறது அம்மா. பக்கத்து ல்லத்தில் பழம், பாயாசத் தாடு விருந்தாம். பாமரர்க்குக் காடுக்கிறோம் என்கிறார்கள். சன்று வரவா அம்மா?”

“ஆ...என்ன காரியம் செய்ய ண்ணிணாய் கண்ணே? பாரெல் ாம் புகழும் மகன் நீ. கேவலம் ருக்கைக்காக அயல் வீடு புகு ன் என்றாயே? அது உனக் ...புகழ் தருமா கண்ணே?”

“போ... அம்மா. “பசி வந்திடப் த்தும் பறந்து போம்” என்பது ழமொழி அம்மா.”

“ஆவிற்கு நீரென்று இரப் னும் நாவிற்கு இரவின் இளி ந்ததில்” என்பது அதைக் ாட்டிலும் பழமையான ‘குறள்’ ண்ணே!

“அதன் பொருள் என் ம்மா?”

“வாயில்லாப் பிராணியான சு நீர் விடாயால் வருந்துவது ண்ட நிலையிலும் அதன் நீர் விடாய் தீர்த்தல் வேண்டிப் பிற ில்லத்தே சென்று நீரை யாசித் தல்கூடக் கூடாது. அது இழி செயலின் பாற்படும் என்பது தான் இதன் பொருள்.”

“அப்படியா அம்மா. நல்லது. இனியான் இத்தவற்றை ஒரு போதும் செய்யமாட்டேன். தந்தை மகிழும் விந்தை மகனாய் இருப்பேனம்மா. வயிறு பெரிதல்ல. மானம் பெரிது என்பதை எவ்வளவு அழகாக வலியுறுத்து கிறார் வள்ளுவர்....நான் விளை யாடி வருகிறேன் அம்மா.”

மெதுவாக வெளியே ஊர்ந் தான் அவன். வீட்டினுள் நுழையும்போது பசி பசி என்று துடித்த இளமனது இப்பொழுது பசியை மறந்து பழந்தமிழைப் பற்றி விட்டது. “ஆவிற்கு நீரென்று இரப்பினும்...” என்று அசை போட்டது நா. “பால்மணம் மாறாப்பாலகன் பழந்தமிழின் சுவையுண்டு பசி மறக்கலாயிற்று என்றால்.........என்னே கொடுமை? பார்த்திருந்த அன்னை......பாவி நான்...பாவி நான்...” என்று பரிதவித்தாள்.

“பாலகனுக்குணவில்லை. பாவலர் தாம் கணவர். பயனென்ன?” என்று சீறிப் பாய்ந்தது அந்தப் பேதையுள்ளம். குடரைப் பற்றி இழுத்தது. ஆனால் அத்தான் பழக்கமாகிவிட்டதே. பஞ்சன்ன பாதங்கள் நிற்க இயலாது துவண்டன. படுத்துவிட்டாள் அவள்.

பகற்பொழுது கழிந்தது. பாவலர் வந்தார். பாலகன் சோர்ந்து, ஆனால் பாய்ந்துவந் தான்.

“அப்பா! அறிவீரோ இன்று...”

“...என்ன நடந்தது குழந் தாய்?”

“பசி அதிகமாயிற்று அப்பா. பக்கத்து வீட்டிற்குச் செல்கிறேனென்றேன். அம்மா தடுத்து விட்டார்கள். ஆனால் அழகான குறளொன்று தந்தார்கள் அப்பா.”

“எது குழந்தாய்?”

“ஆவிற்கு நீரென்று இரப் பினும் நாவிற்கு இரவின் இளி வந்ததில் என்ற குறள் அப்பா.”

புலவர் மயங்கினார். தன் தவறை நினைந்து மனதிற்குள் புலம்பினார். பெண்டு மறைத்த உண்மையை பிள்ளை எவ்வளவு எளிதில் எடுத்துரைத்து விட் டான். “இனியும் இங்கிருந்து பயனில்லை. பாப்பாடாத நாளெல் லாம் பழந்தமிழின் பொன்னடி யில்பூப்போடாத நாளேயாகும்.” என்று எண்ணினார் புறப்பட் டார். வழி நடந்தார். புரவலர் யாரென்று புலங்கேட்டுத் தெரிந் தார்.

★

காலைநேரம் கதிரவன் எழா முன்னமேயே எழுந்துவிட்ட ஏருழவன் தன் காணியை நோக்கி வழி நடந்தான். ஏற்றப் பாடல் அவனுடைய இதழ் களிலே வெடித்துச் சிதறியது. எண்ணமெல்லாம் இல்லாளின் மீது வைத்த அவன் இதய மெல்லாம் பொங்கிவரப் பாட லானான். ஆவும், மாவும் உணவு மேய்வதோடு உள்ளின்பத்தை உணர்த்தின. தென்பாங்கு சீராக ஓங்கியது. இடையிலே ஏதோ ஒரு தட்டு. எங்கிருந்தோ இடையிலே ஏதோ ஒரு சிறு தட்டு. எங்கிருந்தோ குரல் ஒன்று. அதில் இன்பம் தோய்ந்திருக்க வில்லை. வேதனையால் விம்மிய குரல் அது. விவசாயி கேட்டான். நின்றான். விரைவாக நடந்து சென்றான். குரலொலி கேட்ட பக்கம். “ஐயகோ, அம்மவோ” என்று அரற்றிக்கிடந்தார் ஒருவர். அம்மொழியாலேயே அவர் யாரோ அறிஞரென உணர்ந் தான் அவன்.

“ஐயா! ஐயா!” என்றழைத் தான். பேச்சில்லை. ஆயனொரு வன் அவ்வழியே செல்லக் கண் டான். அழைத்தான். ஆவின் பாலை மயக்கமுற்றுக் கிடந்தவரது வாயிலே ஊற்றினான். மெல்ல உணர்வு கொண்டாரவர்.

‘என்ன இது? யானெங்கே இருக்கிறேன்?’

“இது அதிகமானின் ஆட் சிக்கு உட்பட்ட ஆரண்யம், ஐய! தாங்கள் யாரோ?”

“யான் ஒரு புலவோன் அப்பா.”

“அப்படியா! அரசரைக் காண வந்தீர்கள் போலும்.”

“ஆமாம்....ஆமாம்......அரண் மனைக்குச் செல்லும் பாதை எது அப்பா...?”

“அதோ தெரிகின்றதே சிறு வரை அதைக் கடந்து செல்ல வேண்டும். அதற்கிடையிலே காடு ஒன்று உண்டு. அதில் இரவில் செல்லாதீர்கள்...ஐயா, கடும் புலியும், நெடும் பாம்பும் உலவும் கானகமது.”

“நன்று ஐய! மிகநன்று! சென்ற உயிரை மீட்டளித்து அது செல் லாதிருக்கவும் வழிகாட்டிவிட் டீரே. உம்மிலும் உயர்ந்தோர் எவரே உள்ளர். நானில மீதில் நலமெல்லாம் பெற்று வாழ்க நீவிர்” என்று வாழ்த்திவிட்டு மெல்ல எழுந்து நடந்தார் புலவர்.

கன்றிக்கிடந்த கால்கள் கெஞ் சின. மிஞ்சி நின்ற மனைவி மக்கள் நினைவோ அவரை முன்னேக்கி நெட்டித்தள்ளியது. “கால்களே! வருந்தாமலிருங் கள். இதோ இக்காடும் மலையும் கடந்தால் அதிகனைக் காணலாம். அவன் உம் வேதனை நீங்க வெந் நீர் வார்த்து, வெண்பஞ்சணையில் அமரச் செய்வான். அதுவரை வாடி நிற்கும் என் மனைவியை யும், மகனையும் எண்ணி வழி நடப்பீர்களாக!” என்று வியங் கோள் விட்டவண்ணம் நடந்தார் அவர்.

★

“ஐயா! அதிகமான் புகழ் அகிலமெல்லாம் பரவட்டும். அவரது அரண்மனை எது ஐயா?”

“புலவர்......தாங்கள் வேற் றூரோ?”

“ஆம் ஐயா!”

“நன்று. அதோ விண்மீன் களிடையே தோன்றும் வெண் ணிலவு போன்று மாடமாளிகை களிடையிலே நெடிதுயர்ந்து காணப்படுகிறது பாரும். அது தான் அரண்மனை.”

“நல்லது நான் வரட்டுமா?”

“சென்று வாருங்கள், ஐயா. செல்வமெல்லாம் இனி உம் காலடியில்தான்” என்ற வழிப் போக்கன் மறைமுகமாகத் தன் னரசனுடைய புகழைக் கூறி விட்டதாக மனமகிழ்ந்து பெரு மிதத்துடன் நடக்கலானான். புல வரும் மகிழ்வு அரண்மனையை நோக்கி நடந்தார்.

“பல நாட்கள் பசித்திருந்த தோற்றம்! பார்த்தால் புலவ ரெனத் தோன்றுகிறது...அரசே! அவரை உள்ளே அழைத்து வரலாமா?” அதிகமான் மிகவும் களைத்திருந்தான். அரசியலில் அன்றைக்கு என்றுமில்லாத அளவுக்கு உழைத்திருந்தான் அவன். உடலெல்லாம் அசதி. தலை சாய்த்துப்படுத்தால் போதும் என்ற எண்ணத்தோடு அரசவையினின்று விடுபட்டு வந்திருந்தான் அவன். அந்த நிலையில் புலவரும், பெருந் தமி ழும் அவன் கண்முன் தோன்ற பஞ்சணையும், மெல்லணையுமே தோன்றிப் பரவச மூட்டின. எனவே புலவர் பேணும் புரவ லன் அதிகமான் தன்னை மறந் தான். தமிழை மறந்தான். “அவ் என்னைக் கண்டால் தானு புலவர்? எங்கிருப்பினும் புல வர்க்குப் பெருமையுண்டு. அவர்க்கு வேண்டிய பொரு ளெல்லாம் கொடுத்து அ

— 8ம் பக்கம் —

★ திருப்பூர் தமிழ்ச்செல்வி ★

அத்திப் பழம்

- 3 -

ஞானசம்பந்தன் இவற்றில் தன் மனத்தை ஈடுபடுத்த வில்லை. எந்தப் படம் நல்ல படம் எதில் உள் நுழைச் சீட்டு கிடைக்கும், பெரிய அழகா, இல்லையா என்பது; ஒன்றைப் பற்றியும் அவன் மனம் எண்ணிப் பார்க்கும் நிலையில் இல்லை. 5-30 மணி பஸ் கிடைக்குமா என்ற ஒரே கவலைதான் அவன் மனத்தில் புகுந்து குடைந்துகொண்டிருந்தது. 'இதோ ஆயிற்று' என்று தன் கடமைகளை எல்லாம் விரைவாக முடித்துக்கொண்டு வெளியூர் பஸ் நிலையத்தை அடைந்து உரிய பஸ்ஸில் ஏறி 'மாத்தூர் ஒன்று' என்று சொல்லி நடத்துவோரிடம் இரண்டு ரூபாய்க் கட்டணத்தைக் கொடுத்த பின்தான் தன்னைச் சுற்றி ஒருமுறை பார்த்தான்.

தன்னை அறிந்தவர்கள் யாரையும் அவன் அங்கு காணவில்லை. கூட்டமும் மிகுதியாக இல்லை. எழெட்டுப் பெண்களும் பத்துப் பதினைந்து ஆண்களும் மட்டும்தான் இருந்தனர். இரண்டொருவர் கூடைக்காரரை எல்லாம் அழைத்து அழைத்து அவர்கள் தலையில் சுமந்து விற்ற பொருள்களை எல்லாம் ஒன்றுவிடாமல் எடுத்துப் பார்த்து சொன்ன விலையில் பாதி கேட்டும், கேட்ட விலைக்குக் கொடுத்துவிடுவான் போல் தோன்றினால் இது சொத்தை அது கொள்ளை என்று தட்டிக் கழிக்க முயன்றுகொண்டும் இருந்தனர். ஒரு தாய் தன் கைகளுக்குள் அடங்காது ஆர்த்து அழுத தன் குழந்தையை அடித்து அடக்கிவிட முயன்றுகொண்டிருந்தாள். அந்தத் தாயின் ஆத்திரம் மிக மிக குழந்தையின் அழுகையும் மிகுந்தது.

இந்தச் சூழ்நிலையை ஞானசம்பந்தன் இப்போது காணவும் கூசினான். பத்து நாட்களுக்கு முன் தன்னுடைய ஊரில் இருந்து பெட்டியையும் படுக்கையையும் சுமந்துகொண்டு தன்னுடைய தந்தையுடன் இதேபோல்தான் சென்னைக்கு வந்தான். நாளை ஊரிலிருந்தும் இப்படித்தான் எங்கும் போக இருக்கின்றான். ஆனால் ஏனோ பழங்களை விலை பேசுவதும், அழும் குழந்தையை அடக்குவதும் அவனுக்கு அருவருப்பைத் தந்தன.

"எல்லாம் படிப்பில்லாத குறைதான். நாகரிகம் தெரியவில்லை" என்று தன் மனதிற்குள் நினைத்துக்கொண்டான். படிப்பில்லாத குறை என்ற எண்ணம் தோன்றியதும் யார் யார் எவ்வளவு படித்திருப்பார்கள் என்பதனை அறிந்துகொள்ள மறுபடியும் எல்லோரையும் ஒருமுறை கூர்ந்து பார்த்தான். அவனுடைய கண்ணுக்கு அங்கு யாரும் படித்தவராகத் தோன்றவில்லை. பரபரப்பான செய்திகளை மட்டும் தாங்கி வெளிவரும் நாளிதழ் ஒன்றை மடித்து மடித்து கைக்குள் அடக்கிக்கொண்டிருந்த வற்றல் மனிதர் என்ன ஏழாவதோ எட்டாவதோ இல்லை எழுத்துக்கூட்டிப் படிப்பவரோ என்று எண்ணியதும் தன்னைப்பற்றி ஒரு செருக்கு அவன் உள்ளத்திலே புகுந்தது. தான் கல்லூரியில் படிக்கும் மாணவன் என்ற எண்ணம் அவனுக்கு ஒருவகை தனிமையைத் தேடித்தந்தது. மற்றவர்களைவிடத்தான் வேறானவன் என்ற இறுமாப்பு அவன் மனதில் வேர்விடத் தொடங்கிவிட்டது.

வளர்ச்சி இருவகையில் ஏற்படுகின்றது. மெல்ல மெல்ல வளரும் வளர்ச்சி ஒரு வகையாகவும், நெடு நெடு வென வளரும் வளர்ச்சி ஒரு வகையாகவும் இரு வகையில் அமைவதனைக் காணுகின்றோம். புறத்தில் உடலில் உண்டாகும் வளர்ச்சி மெல்ல மெல்ல ஏற்படுகின்றது. ஆனால் அகத்தில் மனத்தில் ஏற்படும் வளர்ச்சியோ நெடுநெடுவென விரைந்து நிகழுகின்றது. 'இது நல்லது' என்று கருதும் ஒன்றனை ஒருகணம் ஓடி மறைவதற்குள் மனம் 'தீது' என்று தீர்மானித்து ஒதுக்கிவிடுகின்றது. தீமையென்று வெறுத்து ஒதுக்கியதை நன்மை என்று வாரி அணைக்கின்றது. மனத்தினால் அது முடிகின்றது. அதற்குக் காரணம் ஒன்றும் சொல்ல இயலுவதில்லை.



ஆனால் உடலால் அது இயலாது. பாகற்காய் நல்லது என்று உடம்புக்கு ஒத்துக்கொண்டால் அதை எளிதில் விடமுடிவதில்லை. கத்தரிக்காய் வேண்டாம் என்று விட்டுவிடும் நா மறுபடியும் அதை ஏற்றுக்கொள்ள தயங்குகின்றது, தடுமாறுகின்றது. தன்னுடைய விருப்புக்கும் வெறுப்புக்கும் உடலால் காரணம் சொல்லமுடியும். மனதில் ஏற்படும் இச்சைகளும் அப்படிப்பட்ட விரைவு வளர்ச்சிக்கு உட்பட்டவைகளாகவே இருக்கின்றன. 'நான் படித்தவன்' என்று தருக்கிய ஞானசம்பந்தனின் மனத்தில் வேர்விட்ட அந்தச் செருக்கு நெடு நெடு வென வளர்ந்து நிலைத்துவிட்டது. அந்த எண்ணம் நிலைத்துவிட்ட பின்னர் அவர்களோடு சரிசமமாக பஸ்ஸில் உட்கார்ந்திருப்பதுகூட பிடிக்காதவன் போல் ஒருபுறமாகத் திரும்பிப் பார்த்துக்கொண்டேதான் தன் ஊர்வரையில் வந்தான்.

"அம்மா" என்று தெருவாயிற்படியில் நுழைந்தவாறே ஞானசம்பந்தன் தன் தாயை அழைத்தான். அந்தக் குரலைக் கேட்டதும் சிவகாமி அம்மாள் ஓடிவந்தாளா அல்லது வேகமாக நடந்து வந்தாளா என்பதை நிச்சயமாக சொல்ல இயலாது. பறிகொடுத்து விட்டு இனி காண இயலாது என்று கைவிட்ட பொருளைக் கண்டெடுத்த களிப்பு அந்தத் தாயின் கண்களில் ஒளி விட்டது.

"வாப்பா வா. நீ இன்று வருவாய் என்று எனக்குத் தெரியாதே. அவர் எப்போதும் இப்படித்தான் எதையும் சரியாகச் சொல்வதும் இல்லை செய்வதும் இல்லை. இன்று எப்படி அவன் வருவான்? நாளை காலைதான் வருவான் என்று சொன்னாரே... நான் மட்டும் அப்போதே சொன்னேன், சம்பந்தன் பாருங்கள் இன்றே வந்து விடுவான் என்றேன்" என்று அந்த அம்மாள் ஏதேதோ நினைவுக்கு வந்ததையெல்லாம் பேசிக்கொண்டிருந்தாள்.

'அதற்கென்னமா இப்போது? நான்தான் வந்திருக்கின்றேனே!' என்றான் அவன்.

பிறகு தாய்க்கும் மகனுக்கும் இடையில் எத்தனையோ செய்திகளைப் பற்றி உரையாடல் நடைபெற்றது. ஞானசம்பந்தன் ஒவ்வொன்றாக சிவகாமி அம்மாளுக்கு விளக்கிச் சொல்லிக்கொண்டே வந்தான். அந்த அம்மாளும் எல்லாம் விளங்கியது போல் "ஊம்... அப்புறம்..." என்று கேட்டுக்கொண்டே இருந்தாள்.

எங்கோ வெளியூருக்குப் போயிருந்த பெரியசாமி இரவு நெடுநேரம் கழித்துத்தான் வீடு திரும்பினார். மகனுடைய வருகையைக் கண்டு அந்தத் தாய் அடைந்ததைப்போல் வியப்பும் அடையவில்லை; ஆர்வமும் காட்டவில்லை. அவர் "சாப்பாடு எப்படி? பச்சரிசியா புழுங்கலரிசியா?" என்றுதான் சிவகாமி அம்மாள் தன் மகனைக் கேட்டுக்கொண்டிருந்தாள். ஆனால் பெரியசாமி "என்ன படித்தாய்? ஏதாவது விளங்கவில்லையா? கண்டபடி ஊர் சுற்றக் கிளம்பிவிடாதே பட்டணம் பொல்லாத ஊர்" என்று தன் மகனுக்குச் சொல்லிக்கொண்டிருந்தார்.

மறுநாள் காலையில் எழுந்ததும் எழிலனைக் காணவேண்டுமென்று ஞானசம்பந்தன் நேரே குளத்தங்கரை அரசமரத்தடி மேடைக்குச் சென்று ஒரு வேப்பங்குச்சியை ஒடித்து வாயில் வைத்துக்கொண்டு உட்கார்ந்தான். நெடுநேரம் கழிந்த பின்னரும் எழிலனைக் காணவில்லை. 'எங்கே போனானோ' என்று எண்ணிக்கொண்டே வீடுதிரும்பியவன் வழியில் யாரையோ பார்த்து" எழிலன் எங்கே காணோம்" என்று கேட்டான்.

"அவன் ஊரில் இல்லையே நான்கு நாட்கள் ஆகும் திரும்பி வர" என்று அந்த ஆள் சொல்லி விட்டுப் போனான்.

ஏன் போனான்? எங்கே போனான்? என்றெல்லாம் கேட்க வேண்டும் என்று ஞானசம்பந்தன் விரும்பினான். 'தெரிந்திருந்தால் அவனே சொல்லி இருப்பானே' என்று எண்ணிக்கொண்டு தன்வழியே போனான்.

சனி ஞாயிறு இரண்டு நாட்களும் மாத்தூரில் இருக்கவேண்டும் என்று எண்ணியவன் ஞானசம்பந்தனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. 'எழிலன் கூட இல்லை, யாருடன் பழகுவது பேசுவது' என்று தெரியாதவனாய் மருண்டான்.

பிறந்த மண் இப்போது அவனுக்கு வேற்று மண்ணாகிவிட்டது. இதுவரையில் வாழ்க்கை கழிந்த இடம் இப்போது பொழுது போகாத ஊராகிவிட்டது. சென்னையில் இருக்கின்றபோது 'எப்போது மாத்தூருக்குப் போவது' என்று துடித்துக்கொண்டிருந்தவன் 'எப்படி இங்கே இருப்பது!' என்று



தவித்துக்கொண்டிருந்தான். சுற்றிலும் இருந்த வயல் வெளிகள் பாழ் நிலமாகவும், மக்கள் விலங்குகள் போலவும் கொடிக்கொரு முறை அன்போடு அழைத்து ஏதாவது கேட்டுக்கொண்டிருந்த தாய் தனக்கு ஒரு தொந்தரையாகவும் மெல்ல மெல்ல கருதத் தொடங்கினான்.

எத்தனையோ பேர் ஆசையுடன் வந்து 'தம்பி எப்படி இருக்கிறாய்?' என்று கேட்டுவிட்டுப் போனார்கள். தங்கள் ஊர்த் தெரு மண்ணில் அலைந்து திரிந்த ஒருவன் கல்லூரி மாணக்கன் என்பதில் அவர்களுக்குப் பெருமை மிகுந்திருந்தது.

அவர்கள் காட்டிய ஆர்வம், ஆசையுடன் கேட்ட வினாக்கள், இவை எதுவும் அவன் மனதில் மகிழ்ச்சியை ஊட்டவில்லை. மாறாக வெறுப்பை விளைக்கத்தான் பயன்பட்டன. 'என்ன மக்கள் இவர்கள் தங்கள் தங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு போவதுதானே, யார் எப்படிப் போனால் இவர்களுக்கு என்ன? என்று கூட சலித்துக்கொண்டான்.

இந்த தலைகீழ் மாறுதல் எல்லாம், கடந்த ஒருவார காலத்தில் ஏற்பட்டது. முன்னே இருந்த ஞான சம்பந்தனுக்குப் பதில் புதிய ஞான சம்பந்தனாகத் தன்னை எண்ணிக்கொண்டான்.

இத்தனைக்கும் அவன் படித்த கல்லூரியில் எந்த ஆசிரியரும் 'கல்லூரி மாணவர்கள் தனி சாதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மற்றவரைவிட உயர்ந்தவர்கள். சிறப்பானவர்கள்'' என்று சொல்லித்தரவில்லை. அந்தக் கல்லூரியில் மட்டும் என்ன எந்தக் கல்லூரியிலும், எந்தப் பள்ளியிலும் யாரும் அப்படிச் சொல்வது இல்லை. ஆனால் நம் மாணவர்களிடையில் எப்படியோ சில பேருக்கு இந்தச் செருக்கு ஏற்பட்டு விடுகின்றது.

பெற்ற தாயையும், பேணி வளர்த்த தந்தையையும் பேதையர் என்று எண்ணிடுகின்றனர். பிறந்த ஊரை ஏறெடுத்தும் காணக் கூசுகின்றனர். ஆண் பெண் என்ற இரு சாதிகள் தான் உண்டு என்ற நிலையை மாற்றிப் படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற இரு சாதிகளை இவர்கள் படைத்து விடுகின்றனர். எல்லோருக்கும் இந்த அறியாமை நோய் வருவதில்லை. சிலருக்கு எங்கோ செருக்குதான் ஏற்படுகின்றது. சமுதாயத்தில் அவர்கள் பிறருடன் பழகுகின்றபோது அவர்கள் இழைக்கும் குற்றங்கள், புரியும் தீமைகள் தெற்றெனத் தெரிகின்றன. படித்தவனும் இப்படியா? என்று பாமரமக்கள் எண்ணுகின்றனர்.

எப்படியாவது மாத்தூரைவிட்டுப் போய்விட்டால் நல்லது என்று கருதி அதற்கு என்ன செய்யலாம் என்று நினைத்தவன் திங்கட்கிழமை காலை போவதைவிட ஞாயிற்றுக்கிழமை மாலையே போய்விட வேண்டும் என்று துடித்தான்.

''ஏன் நாளைக்கு போகலாமே 10½ மணிக்குத்தானே வகுப்பு முதல் பஸ் 8½ மணிக்குப் போய் விடுகின்றதே'' என்று அவன் தந்தை சொன்னார். என்ன சொல்லுவது என்று ஞானசம்பந்தன் சற்று நேரம் திகைத்தான் இன்று வேண்டாம் என்று தந்தை தடுத்தும் எப்படியும் போக வேண்டும் என்ற பிடிவாதம் அவன் மனத்தில் ஏற்பட்டுவிட்டது. துணிந்து ஒரு பொய்யைச் சொல்லிவிட வேண்டியதுதான் என்று எண்ணியவனாய் ''இல்லையப்பா நாளை காலை 9 மணிக்குத் தனி வகுப்பு ஒன்று இருக்கிறது. இன்றே போனால் தான் அதற்குப் போக இயலும்'' என்று சொன்னான். அதன் பின்னர் என்னசொல்வது என்று பெரியசாமிக்குத் தெரியவில்லை.

''சரி, போ. நன்றாகப் படி'' என்று சொல்லி அனுப்பினார்.

''உடம்பைப் பார்த்துக் கொள்'' என்றுசிவகாமி அம்மாள் சொல்லிய வண்ணம் காகிதப் பொட்லம் ஒன்றை அவன் கையில் வைத்துத் திணித்தாள். பஸ்ஸுக்காகக் காத்திருந்த போது ஞானசம்பந்தன் அந்தப் பொட்டலத்தைப் பிரித்து உள்ளே என்னதான் இருக்கும் என்ற ஆவலுடன் பார்த்தான்.

நன்றாக வறுத்து மிளகுத் தூளும் உப்புத் தூளும் கலந்த முந்திரிப் பருப்பு அந்த பொட்டலத்தில் இருந்தது. அதைக் கண்டவுடன் அவன் மனம் கசிந்து கண்கள் ஈரமாகின. 'என்ன அன்புஎன்று வாய்விட்டு மெல்ல சொல்லிக் கொண்டான்.

முந்திரிப் பருப்பு என்றால் அவனுக்கு மிகவும் பிடிக்கும். சின்னப் பையனாகத் தவழ்ந்து கொண்டிருந்தபோது பெரியசாமி ஆசையுடன் தன் மகனை எடுத்து மடியின்மீது வைத்துக்கொண்டு வெண் பொங்கலில் இருக்கும் முந்திரிப் பருப்பையெல்லாம் கொடுப்பார். ஞான சம்பந்தனுக்கு அப்போது கீழ் வரிசையில் இரண்டு பற்களும் மேல் வரிசையில் இரண்டு பற்களும் தான் இருந்தன. அந்தச் சின்னப் பற்களுக்கிடையில் முந்திரிப் பருப்பைக் கடித்துக் குதப்பிக் குழப்பி உண்ணும் சின்ன வாயழகைக் கண்டு கணவனும் மனைவியும் மயங்கிப் போவார்கள். இன்று அந்தத் தாயின் மனதில் தன் மகன் முந்திரிப் பருப்பு தின்னும் சின்னக் குழந்தையாகத்தான் தோன்றுகின்றான்.

இதை ஒரு கணம் எண்ணிப் பார்த்த ஞான சம்பந்தன் 'இத்துணை அன்பான தாயை விட்டுமா போய்விடத் துடிக்கின்றேன்' என்று இரங்கினான். அந்த இரக்கம் இளகி வருவதற்குள் சென்னை சென்ற பஸ்ஸில் அவனும் ஒரு பிரயாணி ஆகி விட்டான்.

சென்னை மலைப்பாதையில் ஒரு சினிமா கொட்டகையின் எதிரில் ஞான சம்பந்தன் ஏறி வந்த பஸ் நிற்கும்போது உள்ளே இருந்து இனிய இசை எழுந்து வந்தது. அந்த நிறுத்தத்தில் யாரோ ஒரு வயது முதிர்ந்த தாய் தள்ளாடிக்கொண்டே இறங்கி ''அப்பா, அப்பா அதோ மேலே கோணி மூட்டை அதைக் கொஞ்சம் இறக்கிக் கொடுத்துவிடேன்'' என்று கெஞ்சினாள்.

''என்ன இந்தக் கிழங்கள் கொடுக்கின்ற தொல்லை பெரியதாகப் போய் விட்டதே இதெல்லாம் சாமான் இரயிலில் ஏற்றி வரக்கூடாது?'' என்று கோபமாகச் சொல்லிக்கொண்டே அந்த மூட்டையை மேலே இருந்து கீழே தள்ளினான் நடத்துவோன்.

பஸ் நின்ற உடனே சினிமாவுக்குப் போய்விட்டுத்தான் விடுதிக்குப் போனால் என்ன என்று ஞான சம்பந்தன் எண்ணினான். போவதா வேண்டாமா என்று அவன் தீர்மானித்தபோது நடத்துவோர் கிழவியின் மூட்டையைத் தள்ளிவிட்டு 'சரி'சொல்லி விட்டான். நகர்ந்துகொண்டே இருந்த வண்டியிலிருந்து தொப் என்று கீழே குதித்துப் படக் கொட்டகையின் வாயிலைச் சென்றடைந்தான் ஞானசம்பந்தன்.

நாளை காலை தனி வகுப்பு என்று தந்தையினிடம் காரணம் சொல்லிவிட்டு வந்தவன் மாலை படக் கொட்டகைக்குள் செல்லும் வழி எது என்று ஆராய்ந்து கொண்டிருந்தான்.

அங்கே அந்தத் தாயும் தந்தையும் இந்தப் பிள்ளையின் வாழ்க்கையைப்பற்றி ஏதேதோ திட்டங்களை தங்களுக்குள் பேசிக்கொண்டு, குழம்பையும் சோற்றையும் குழைத்துக்கொண்டிருந்தனர்.

இரண்டு மூன்று வாரங்களாகத்தான் காணோம், இந்த வாரம் எப்படியும் வருவான். அவன் வருவதற்குள் ஏதாவது சிற்றுண்டி செய்து வைக்கவேண்டும் என்று சிவகாமி அம்மாள் கைமுறுக்கு சுற்றி வைத்துவிட்டு மாலை பஸ் எப்போது வரும் என்று தெருத் தாழ்வாரத்திலேயே உட்கார்ந்து காத்துக் கொண்டிருந்தாள். மாலையும் கழிந்து மையிருட்டும் சூழ்ந்தது; ஆனால் மகன் வரவு காணோமே என்று அந்தத் தாய் சோர்ந்து போய் விட்டாள். 'என்ன வேலையோ என்னமோ' என்று ஒருகணம் அமைதியுறுவாள், மறுகணம் எதையோ எண்ணிக் கொண்டு இந்தப் 'பஸ்காரர்கள் இப்படித்தான்' என்று சொல்லிக் கொள்வாள்.

தொடரும்

— 5ம் பக்கத் தொடர்ச்சி —

யனுப்புமின்'' என்று கூறிவிட்டு அவன் படுக்கைக்குச் சென்றான்.

பொன்னும் மணியும் குவித்திருக்க ஓர் தட்டு. பட்டும் ஆரமும் நிறைந்திருந்த மற்றோர் தட்டு. இவைகளைக் கொண்ட இரு சேவகர். தம்மை நோக்கி வருவது கண்ட புலவர் அயர்ந்தார். எல்லா அரசரும் புலவர் விடை பெறுகையில் பொருள் கொடுப்பர். அதிகமான் அவையிலே வரவேற்பே இப்படித்தான்போலும் என்றெண்ணினார். ஆனந்தம் குமிழியிட்டது நெஞ்சிலே... தன்னைக் கண்டு தன் பாமாலை சூடாமுன்னமே இவ்வளவு பொருளளித்தால் தன் பாக் கேட்டு யாதுதான் செய்யமட்டார் என்ற பெருமிதத்துடன் விழிகள் விரிய நின்றிருந்தார் அவர். வந்த ஆட்கள் வணங்கினர். அவரும் வணங்கினார்.

''இதோ இவைகளை ஏற்றுக்கொள்ளுங்கள். எம்மரசர் இன்று உடல் நலமற்று உள்ளார். ஆதலின் உம்மால் காண இயலாது. எனவே உமக்கான பரிசை இதோ எம்மூலம் அனுப்பியுள்ளார்' என்றனர் வீரர்கள்.

புலவர் திகைத்தார். ஓங்கிய கை கீழே தளர்ந்தது. தம் சுற்றத்தார் பசிப்பிணியையும், தாம் கடந்து வந்த பெருங்காடும், நெடுவரையும் அவர் கண்முன் நிழல் விரித்தன. சற்று முன் அவருள்ளத்தே தோன்றிய எண்ணங்கள் எட்டிச் சென்றன. தன்னை இழிவுபடுத்திய அதிகனை எண்ணி வெகுண்டார். தமிழின் மாண்பறியாது, தமிழ்ப் புலவரை இழித்து வெளியேற்றும் தகைவில்லாரிடம் தம் பெருமை கூற வந்த தன் நிலையை எண்ணி வருந்தினார். அந்நிலைக்கு தம்மை ஆளாக்கிய பசிப்பிணியை நெஞ்சார வெறுத்துரைத்தார். தங்கத் தட்டுகளை ஏந்தி நின்ற காவலாளிகளைப் பார்த்தார். தமிழ்ப் பாவாணருக்கே உரித்த பெருமிதத்தோடு கூறினார்.

''காவலரே! கவிவாணரின் பெருமையறியாத காவலனின் காவலரே! இப்பரிசில் எனக்கு வேண்டாம். இவற்றை எடுத்துச் செல்லுங்கள். குன்றும் மலையும் கடந்து நான் இங்கே வந்தேன். பாடிப் பரிசில் பெற வந்தேனென்று கூறி காவலன் அழைப்பிற்கே யான் காத்து நின்றேன். அந்த அழைப்பில்லாமல் என்பால் ஏதோ பெருங்கருணை கொண்டு இதனை எடுத்துச் செல்க என்று கூறி அனுப்பினானே உம் தலைவன். அவன் எதைக் கொண்டு எம் பெருமையை அளந்தறிந்தான்? பாவளங் கண்டு பரிசில் அளித்தல் தானே முறை. அஃதின்றி உம்மூலம் தரும் இவற்றை முகமறியாது பெற நான் இரவலனல்லேன். கிடைத்தது போதும் என எண்ணும் வாணிகப் பரிசிலனும் அல்லேன். இப்பொன்னையும், மணியையும் காட்டிலும் என் பெருமை அறிந்தோர் கொடுக்கும் பரிசில் தினைத்துணைத்தாயினும் நன்று.

''குன்றுமலையும் பல பின்னொழிய
வந்தனென் பரிசில்
கொண்டனென் செலற்கென
நின்ற வென்னயந்தருளி
யீது கொண்
டீங்கனஞ் செல்க தானென
வென்னை
யாங்கறிந் தனனோ
தாங்கருங் காவலன்
காணாதீத்த விப்
பொருட்கியானோர்
வாணிகப் பரிசிலனல்லேன்
பேணித்
தினைத்துணை யாயினு மினிதவர்
துணையள வறிந்து
நல்கினர் விடினே.''
(புறம். 208)

என்று கூறித் திரும்பினார் புலவர். அவர்தான் பெருஞ்சித்திரனார் எனும் பெயரினையுடையவர். அதிகமான் நெடுமானஞ்சியின் காலத்தே வாழ்ந்தவர் வறுமையிலும், பசியிலும் துடிதுடித்து நின்ற காலத்தும், தம் புகழையும், தமிழ்ப் பெருமையையும் ஒருங்கு காத்துவந்த இவர் போன்ற பலப்பல தமிழ் புலவர்களின் வரலாற்றை புறநானூற்றினிடையிலே நாம் காணலாம். புறநானூறும், அகநானூறும் தமிழர் பண்பாட்டிற்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டுகள். அவற்றுள் புறநானூற்றிலே அமைந்தது இப்பாடல். ★

எழிலன் கவிதைகள்

தேனுய்ப் பாகாய்த்
தித்திக்கும் செங்கரும்பாய்
இனிக்கின்ற கவிதைகள்

விலை ரூ. 1-00

கிடைக்குமிடம்:
பாரி நிலையம்,
சென்னை-1.

26-10-57 சனி மாலை 6 மணிக்கு மயிலை நபிகள் நாயகம் விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய அறிஞர் அண்ணா அவர்களுக்கு, மயிலை துர்க்கா விலாஸ் ஓட்டல் ஊழியர்கள் சார்பாக மாலை அணிவித்தபோது எடுத்த படம்

காதற் பெண்ணே!

[சிறை சென்ற காதலன், காதலிக்கு வரையும் கடிதம்.]

செங்கருப்பச் சாற்றுடலே! தேனே! பாலே!
தெவிட்டாதத் தெள்ளமுதே! இன்ப ஊற்றே!
செங்கனிவாய்த் தேனிதழைச் சுவைத்தேன். இன்று
சிறைக்கம்பி எண்ணுகிறேன் திருவிளக்கே!
அங்கயலே நாமிருவர் சேர்ந்து வாழ
அவனியிலே கொடுத்துவைக்க வில்லை கண்ணே!
எங்கிருந்தால் என்ன நம துள்ளம் ஒன்றே
இன்னுயிரே! என்வாழ்வே வருத்தம் தீர்வாய்.

ஆயிழையே! அன்றொருநாள் உன்னைக் கண்டேன்
அடங்காத பெருங்காதல் உளத்தில் கொண்டேன்
நீயில்லையேல் நானில்லை நினைப்பு இன்றேல்
நெஞ்சில்லை எனும்நிலையை எய்தி விட்டேன்
சேயிழையே! பின்னொருநாள் புவியில் சேர்ந்து
தித்திக்கும் நல்வாழ்வு பெற்றோம். ஆனால்
நீயின்று நீரில்லா தாமரைபோல்
நிலையிழந்து நிற்கின்றாய் வருந்துகின்றாய்.

கலங்காதே காதலியே! ஆசை மானே!
கருவுற்று இருக்கின்றாய் அதிர்ச்சி வேண்டாம்
பொலங்குழையே பிறக்கும்நம் செல்வனுக்குப்
பாலோடு வீரத்தைக் கலந்தே ஊட்டு
கலங்குதிரை முப்பக்கம் சூழ்ந்த நாட்டின்
களங்கத்தைத் துடைப்பதற்குச் சிறைவாழ் வேற்ற
நிலைதன்னை மகனுக்குச் சொல்வாய் கண்ணே!
நித்திலமே கலங்காதே விரைவில் மீள்வேன்.

செந்தமிழர் நன்னாட்டின் துயரைப் போக்கச்
சிறைவாழ்வைப் பெற்றதற்கு மகிழ்கின்றேன்என்
சுந்தரியே! சிந்தாதே முத்து நீரைத்
திருவுலகில் இப்பேறு யார்க்குக் கிட்டும்
எந்தனுயிர் பெற்றேனும் தமிழர் மானம்
இறவாமல் நிலைத்திடுமேல் அதனை இன்றே
தந்துவிட முந்துகிறேன் காதற் பெண்ணே!
தளராதே மகன்பொருட்டு இனிதே வாழ்வாய்.

—ந. அலி, துறையூ

— 4ம் பக்கத் தொடர்ச்சி —

யாது. தமிழ் வணிகர்களும் செல்வர்களும், தென்னக அரசர்களும் ஒருவரை ஒருவர் எவ்வளவு எதிர்த்தழித்தாலும், தம் குடிகளை எவ்வளவு துயரப்படுத்தித் தவிக்கவிட்டாலும், அவர்கள் வகையில் ஒரு வருடன் ஒருவர் போட்டியிட்டுச் சமஸ்கிருதப்பள்ளி கல்லூரிகள், வேதபாடசாலைகள், அறநிலையங்கள், கோயில் திருப்பணிபேரால் மானியங்கள் ஆகியவற்றுக்கு நாட்டின் செல்வ முழுதும் வாரி வழங்கினர். பிரிட்டிஷ் ஆட்சியிலும் இந்நிலையே நீடித்துள்ளது. வடதிசை தராத வாய்ப்பு வளங்களைத் தென்திசை அவர்கட்குத் தந்ததனாலேயே, இன்று கல்வியிலும் அறிவிலும், திறமையிலும் ஆற்றலிலும் வடதிசைப் பிராமணரைவிடத் தென்திசைப் பிராமணரும், மற்றத் தென்திசைப் பிராமணரைவிட தமிழகப் பிராமணரும் தலைசிறந்து விளங்குகின்றனர். அனைத்திந்தியப் பணிமனைகளிலே, எல்லாத் தாய்மொழி நிலங்களிலும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழகப் பிராமணர்களையே மிகமிகப் பெருவாரியாக இன்று காண்கிறோம். அவர்கள் இல்லையானால் இன்று பாரத ஆட்சியில்லை, நாகரிகமில்லை, கலை இல்லை. அவர்கள் இல்லையானால் சமஸ்கிருதத்தின் பெருமை, ஆரிய நாகரிகத்தின் பெருமை பாதிக்கு மேல் குன்றிவிடும்.

மற்ற அயலினத்தவர்களெல்லாம் தம் தாய்மொழி, பழக்க வழக்கங்கள், சமய முறைகளைக் கொண்டே வந்தனர். பலர் இன்னும் அவற்றைப் பேணியே வருகின்றனர். ஆனால் ஆரியர் எனப்படும் பிராமணர் தம் தாய்மொழியைக் கொண்டுவந்தனரோ, இல்லையோ— இன்று புகுந்த நாட்டுத் தாய்மொழியன்றி அவர்கட்கு வேறு எதுவும் மொழி மரபு கிடையாது. பழக்க வழக்கங்களிலும் அவர்கள் தம் அயற்பழமை பேணியுள்ளனர் என்று கூறமுடியாது. அவர்கள் தமிழர் கோயில்களையும் வழிபாட்டு முறைகளையும் சமயத்தையும் தமதாக்கிக்கொண்டு அவற்றில் ஆதிக்கமே வகிக்கின்றனர், தாம் பழய கேள்வி முறைகளை, மந்திர தந்திரங்களைப் பெரிதும் மறந்து கை நெகிழவிட்டுள்ளனர். அதுமட்டுமோ? அவர்கள் வடதிசை முன்னோரையும் உறவினரையும்கூடத் தம் தென்திசை ஆதிக்கத்தில் மாற்றி, தென் திசைப் பண்பை இமயம்வரை ஓரளவு பரப்பியும்விட்டனர். அத்துடன் தம் வடதிசை உறவினர் உண்ணும் ஊனையும் மீனையும் கைவிட்டு, தமிழகச் சமய உயர் வகுப்பினருடன் இடம் பெற்று, அத்தமிழகப் பண்பாட்டை கூர்ச்சரம் அலகாபாது வரை பரப்பியும் வருகின்றனர். அவர்கள் வடதிசை உறவினர் அணிந்து வந்த, அணியும் இரட்டைக் குழல் பைகளை (பாய்ஜாமாக்களை) மெல்லப் பாளைத்தாராக்கி இப்போது பழமைச் சின்னமாக நோக்கி வருகின்றனர். அவர்கள் முன்னோரும் அவர்கள் வழி வந்த இன்றைய வடதிசை உறவினரும் விரும்பி உண்ணும் மரப்பலகை (சப்பாத்தி)யையும் அறவே மறந்து, மென்மை வாய்ந்த தமிழுணவே உண்டு அவர்கள் தமிழரினும் மெல்லியர்கள் ஆய்விட்டனர்.

—மற்றவரினும் முனைப்பாக— மற்ற அயலினங்களைப்போலவேதான் தமிழக, ஆரியரும் முற்றிலும் தமிழராய், தமிழ் நாகரிகத்தைப் பாரதமெங்கும், உலகெங்கும் பரப்பும் தூதராய் விளங்குகின்றனர்.

ஆனால் தென் திசைத் தேனை உலகெங்கும் வாரியிறைத்த, இறைத்து வரும் இதே தமிழக ஆரியர் அல்லது பிராமணர் வடதிசை ஆல காலத்தையும்—வருணாசிரம இன வேறுபாட்டையும்—தமிழகத்தில் ஊறச் செய்து, அதன் பிடியை இன்னும் வலுப்படுத்தவே வடதிசைப் பிற்போக்கு நாகரிகத்துடன் முற்போக்குடைய தென்னகத்தைக் கட்டிப் போட விழைகின்றனர். எப்படியோ முற்றிலும் அவர்கள் கையில் சிக்கிவிட்ட கல்வி, செய்தி பரப்பு நிலையங்களை எல்லாம் இன வேறுபாட்டு முறை, சாதி வருண முறை, மூடநம்பிக்கைகள் பரப்பும் 'அழுகுச் சைத்தான் கலை நிலையங்களாக்க' அரும் பாடுபட்டு வருகின்றனர்.

தென்னகப் பிராமணர் தமிழர் நாகரித்தில் மேம்பட்டு விளங்கும் அளவுக்குத் தென்னகப் பண்பிலும், தமிழ்ப் பண்பிலும் ஊறி, இன வேறுபாடற்ற தமிழர் தனி வாழ்வுரிமைக்குப் பாடுபட்டு, தமிழினத்தைத் தம் மூலதனமாக்கி உலகுக்கு ஒளிதரப் பாடுபடும் நாள்விரைவில் வர வேண்டும். அந்நாளில் வரப் பாடுபடும் பிராமணரே வருங்கால உலகில் உலக நாகரிகத்துக்குப் புது வாழ்வு தந்த பிராமணராகப் போற்றப்படுவார் என்பதில் ஐயமில்லை. மற்றெல்லா வகைகளிலும் வளமும் உரமும் வாய்ப்பும் மிக்க தமிழகத்தை அடிமைப்படுத்தி உள்ளூர நின்றரித்து வரும் ஆரியத்தை, பாரத தேசிய நோயை, உலகின் முதலாளித்துவ முறைக்கெல்லாம் மூல வேராயுள்ள நச்சுப் பண்பை அகற்ற அவர்கள் பாடுபட்டால், தென் திசை மீட்டும் உலக நலனில் பங்கு கொண்டு அதை மீண்டும் புது வாழ்வு நோக்கி வளர்க்கும் வளர்ப்புப் பண்ணையாக இயங்கிவிடும்..

அந்நிலைக்கு உழைக்க இளைஞர் நங்கையர்—பார்ப்பன இளைஞர், நங்கையர்—முன் வந்து, தமிழ்ப் பண்பின் புது வளத்துக்கு இன்னும் ஒரு சான்று அளிப்பாரா?

- தொடரும் -

ஓடக்காரன்

" ஓடத்தில் நான் ஒருவன்தான் இருக்கிறேன். கரையிலிருக்கும் நீ ஏறிக்கொள்ள விரும்பினால், என் ஓடத்தைக் கரைக்குக்கொண்டு வருகிறேன். கரைக்கு வரும் வரை காத்திருப்பாயா? ஒன்றாகப் போக மனமிருப்பின் தெரியப்படுத்தவும். உற்ற நேரத்திலும் ஊமையாக இருக்கக்கூடாதென்றுதான் அழைக்கிறேன்."

" கைரேகை மறைந்து போன இந்த மாலை நேரத்தில் யாருக்காக நிற்கிறாய்? கப்பலுக்குத் திசை காட்டும் கலங்கரை விளக்குப்போல் உனது கண்கள் நான் வர வேண்டிய இடத்தைக் காட்டுகின்றன."

"மீன் பிடிக்கத்தான் சென்றேன்; மீன்களெல்லாம் உன் கண்கள் போன்று இருந்ததால், என்னால் அவற்றிற்கு வலை போட முடியவில்லை. என் படகு வெறுமனமேதான் திரும்பி இருக்கிறது. நீயும் ஏறிக்கொள்."

"கடலில் மறையும் சூரியன் போன்று உப்பங்கழியின் ஒரு புறத்தே நின் முகம் தோன்றுகிறது. இருள், சூரியனைத் துரத்துகிறது. ஆனால் நின்முகமோ இருளையே துரத்துகிறது. அதோ இருளெல்லாம் நின் கூந்தலில் மறைகிறதே."

"கூதிர்பருவத்தின் நுண்துளி சிதறும் இந்த நேரத்தில் தென்னையில் சாய்ந்துகொண்டு யாரை எதிர்பார்க்கிறாய்? என் படகுதான் கடைசிப் படகு. இன்னும் ஏன் அமைதி."

"நான் கரைக்கு வரும்வரை, உன் குரல் காற்றிலே மிதந்து வந்து என்னை அழைத்ததே. நான் வந்ததும் ஏன் நின்றுவிட்டது. அதைக் கேட்பதற்காகக் கழியின் நடுவிடத்திற்கே நான் செல்லட்டுமா? இல்லை. நான் போகவில்லை. அதற்குள் துடிக்கிறாயே, அப்போது எனக்காகத்தான் காத்திருக்கிறாய். புரிகிறது."

"பெண்ணே ஏன் அவ்வளவு வெட்கப்படுகிறாய்? இங்கு யாரும் இல்லையே. ஓ ஓ! இன்னும் சூரியன் கொஞ்சம் தென்படுகிறானா?"

"உன்னுடைய நாணம்தானே உனக்கும் எனக்கும் இடையே நெஞ்சக்கோட்டைக்கு மதில் போன்றிருக்கிறது. நாணம் நாசமாய்ப் போக. உன் கடைக்கண்ணிலே இன்னும் கொஞ்சம் இருக்கிறதே அது."

"என்னைத் திரும்பிப் பார்க்கமாட்டேன் என்கிறாயே. என் கைகளைமட்டும் ஏன் இறுகப் பற்றிக்கொண்டிருக்கிறாய்?"

"இன்னும் நான் உனக்கு முத்துக்களைப் பரிசாகக் கொடுக்கவில்லையே. என் உடையிலிருந்தது உன் நெற்றிக்கு எப்படி வந்தது? திருடியாகிவிட்டாயா? ஆ! வியர்வைத் துளிகள் தானா இவை?"

"குளிரால் நடுங்கும் கார்த்திகைத் திங்களில் ஏன் இவ்வளவு மெல்லிய ஆடை அணிந்திருக்கிறாய்?"

"அடேயப்பா! என்ன வெப்பம்! உன் உச்சி முதல் உள்ளங்கால் வரைச் சுடுகிறதே. என் உடம்புகூடச் சூடேறிவிட்டதே. இவ்வளவு நேரம் என் உடம்பில் இந் நெருப்பு எங்கே மறைந்திருந்தது?"

"இப்படி இறுகப் பற்றிக் கொண்டால், ஓடத்தை எப்படித் தள்ளுவது? ஐயையோ! அழுது தொலைக்காதே. இப்படிப் பக்கத்தில் உட்கார்."

"அன்பே! உன்னை ஒன்று கேட்கிறேன்; ஒருவனே வந்தபோது வந்த விரைவைவிடப் படகு இப்போது இருவர் இருந்தும் இரு மடங்கு விரைவாகப் போகிறதே, அது ஏன்? நீ அருகிலிருப்பதாலா?"

"ஓடத்தை ஏன் அப்படிப் பார்க்கிறாய்? மீன் இல்லை என்றா? அதற்காக என் அன்பு அன்னை என்னைக் கோபித்துக்கொள்ளமாட்டாள். நான்தான் விலைமதிக்க முடியாத "முத்தை" அதற்குப் பதிலாக ஏற்றிச் செல்கிறேனே."

"அதற்குள் நம் குடிசை வந்துவிட்டதே. இன்னும் தொலைவிலே அந்த அடிவானத்தருகே, அந்தக் குடிசை இருந்தாலென்ன? சரி சரி இறங்கு. இல்லை இல்லை! இருவரும் இறங்குவோம்.

-வெ. இரா. முனுசாமி

வெண்பாப் போட்டி-8.

"காய்" என்று எடுத்து "பழம்" என்று முடிக்கவும்.

அமைப்பு இப்படி :

காய்... — — —
— — — | — —
— — — — —
— — பழம்.

['காய்' என்பது, காய்ந்து, காப்த்து என்பதுபோலவும் வரலாம்.]

முடிவு தேதி 30-11-57.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

சினிமாவும் சிவஞானமும்!

கண்ணதாசன்

ரஷ்யா செயற்கைச் சந்திரனை விட்டது. பூ! இதென்ன பிரமாதம்! சிவஞானம் சினிமாவுக்குக் கதை எழுதுவதை விடவா இது பெரிய அதிசயம்! யார் அழைப்பார்கள்? ஒரு நாலணா சான்ஸாவது கிடைக்குமா என்று எதிர்பார்த்த சிவஞானத்துக்கு சினிமா உலகம் கைகொடுத்து விட்டது. சிவஞானமும் ஒரு கையை சினிமாவில் கொடுத்து விட்டு, மற்றொரு கையைப் புத்தகக் கடையில் கொடுத்து வைத்திருக்கிறார். இப்போது, தி. நா. சுப்ரமணியன், ஜெகவீர பாண்டியனார், சிலம்பின் செல்வன், செ. அமலன் முதலியோர் எழுதிய கட்டபொம்மன் புத்தகங்கள் எப்போதும் சிவஞானத்தின் ஒரு கையை விட்டு அகலாமலே இருக்கின்றனவாம் பரவாயில்லை! பத்து எழுத்தாளர்களாவது ஒரு சிவஞானத்தை உற்பத்தி பண்ணட்டும்.

கட்டபொம்மனை சுதந்திர வீரனாகச் சிலர் சித்தரித்தாலும் சித்தரித்தார்கள், அவன் படுகிற பாடு 'பட்டணத்து மவுண்ட் ரோடு'கூடப் படாது. "அவனைத் தமிழ்நாட்டுக்கு அறிமுகப்படுத்தியதே நான்தான்" என்கிறார் சிவஞானம். "என்னையே நடிக்கச் சொன்னாலும் நடித்துவிடுவேன்" என்றுகூடச் சொல்லி விட்டார். ஒழிஞ்சான் போ கட்டபொம்மன்! கட்டபொம்மனைத் தொலைக்க வேண்டும் என்று கருதுகிறவர்கள் யாராவது இருந்தால், அவர்கள் சிவஞானத்தை அந்த வேஷத்தில் நடிக்க வைத்தால் போதும்!

"ஒரு நாளும் காணாதவன் கஞ்சியைக் கண்டானாம்; ஓயாமல் ...யாமல் ஊற்றிக் குடித்தானாம்" ...பதுபோல், ...ாதியில்லாத ...ஞானம் சினிமா உலகத்தைப் ...த்தாலும் பார்த்தார், தின... காலை 6 மணியிலி...து இரவு பத்து மணி ...ரை சினிமாக்காரர்களின் ...த்திலேதான் விழிக்கிறாராம். "திரைக் கதையைப் பற்றி ...வருக்கு என்ன தெரியும்?" ...று கேட்பீர்கள். திரைக்...த என்றால் திரை போட்டுக் ...ண்டு அதை எழுதுவது ...கிற வகையில் தெரிந்...க்கிறார். திரை போட்டுக் ...ண்டு எழுதினால் தானே ...க் கதையைக் கொண்டு கதையை எழுதமுடியும்? ...கட்டும்! இந்தத் 'துறை' ...வது அவர் உருப்பட்டால் ...கு மகிழ்ச்சிதான்!

★

...த்திரத்தை அப்படியே ...மாவாகவோ, நாடகமாகவோ ...யவர்கள் எவரும் இது ... வெற்றி பெற்றதில்லை. ...வது கலப்படம் செய்து ... அம்சத்தை ஊட்டினால் ... சரித்திரம் தாக்குப் பிடிக்... மேல்நாடுகளில் தயாரிக்கப்பட்ட படங்களில் முழு வரலாற்றுப் படங்கள் எல்லாமே தோல்வியடைந்திருக்கின்றன. சமீபத்தில் வெளி வந்த **Alexander —The Great**) 'அலக்சாண்டர்-தி-கிரேட்' உட்பட பிரம்மாண்டமான சரித்திரத் தயாரிப்புகள் அனைத்தும் மக்களின் அபிமானத்தைப் பெறுமலேயே போய் விட்டன. கலையைத் தொழிலாக நடத்தித் தீர வேண்டியவர்கள் அனைவரும் இதன் காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியம்.

சரித்திரம் திரும்பத் திரும்ப வரும். அதைப் பிடித்தான், இதைப் பிடித்தான்; அங்கே கட்டினான், இங்கே வெட்டினான்; சண்டை போட்டான், மண்டை உடைந்தது என்பதைத் தவிர, சரித்திரம் நமக்குத் தரக்கூடிய சுவை அம்சம் எதுவும் இல்லை. வரட்சி மிகுந்த பாதை வரலாற்றுப் பாதை. இதில் சில நீரூற்றுக்களைக் கதாசிரியன்தான் சேர்த்துத் தர வேண்டியிருக்கிறது, அதையும் அதிகமாகச் செய்யவேண்டியிருக்கிறது. சரித்திரத்தில் வரும் மன்னர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்களுடைய குடும்ப வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்புக்கூடக் கிடையாது. இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னதாக வாழ்ந்த கட்டபொம்மனுக்கு நிலையான வரலாற்று ஆதாரம் இல்லை. சிலர் எழுதியுள்ள கட்டபொம்மன் சரித்திரத்தைப் படித்தால் நமக்குக் களைப்பு மேலிடுகிறது. கூடுமானவரை வெள்ளைக்காரர்களுடன் சமாதானம் செய்துகொள்ளவே அவன் விரும்பியிருக்கிறான் என்று எண்ணத் தோன்றுகிறது. "கையிலே பணம் இல்லை, அதனால் வரி கொடுக்கவில்லை, கொடுக்காததால் வெள்ளைக்காரர்கள் படை எடுத்தார்கள்," என்கிறது வரலாறு. இதை மாற்றி, "கையில் பணம் இருக்கும் போதே, அடிமை வாழ்வை வெறுத்த காரணத்தால் கட்டபொம்மன் வரி கொடுக்க மறுத்தான்" என்று எழுதவேண்டி வருகிறது. இப்படி அடிப்படையையே மாற்றி யமைத்துத்தான் நம்முடைய சரித்திரங்களைப் படமாக்க முடிகிறது. "தூக்கு மேடையில் சுதந்திரவீரன் கர்ஜித்தான்" என்று நாம் கதை எழுதுகிறோம். ஆனால், "அங்கே போய் நின்றுதான் அவன் அழுது புலம்பினான்" என்கிறது வரலாறு. குழப்படியும், கோழைத்தனமும், வரட்சியும் மிகுந்த சரித்திரங்களை கையில் தூக்கி வைத்துக் கொண்டு, எல்லா ரசங்களையும் அதில் ஊட்ட வேண்டியிருக்கிறது. வீராதி வீரனாகக் கதாநாயகனைச் சித்தரித்து, ஆசிரியனின் கற்பனை புதிய சரித்திரத்தையே உண்டாக்குகிறது. அப்படிச் செய்தும் அதில் உணர்ச்சிகரமான நாடக அம்சத்தை உண்டாக்க முடிவதில்லை. காரணம், சரித்திர நாயகர்கள் காதலித்ததாகக் கதை எழுத முடிவதில்லை. சுவையான காதல் கலவாத எந்தக் கதையும் வெற்றி பெறுவதில்லை.

சரியாகவோ தவறாகவோ, படங்களின் வெற்றிக்குச் சுவையான காதல்தான் துணையாக விளங்குகிறது. இந்த அம்சமே இல்லாமல் வரண்டு போன வரலாறுகளுள் முதன்மையானது கட்டபொம்மன் வரலாறு. கட்டபொம்மன் வரலாற்றில் அதிகம் கற்பனையையும் காதலையும் கலக்க முடியாது என்பதற்கு மற்றொரு காரணம், அது மிகவும் சமீப காலத்து வரலாறு என்பதாகும். 'ராஜ ராஜ சோழன்' போன்ற மிகவும் முந்திய வரலாறுகளில் எந்த அம்சத்தை வேண்டுமானாலும் சேர்த்துவிடலாம். அவற்றில் நாம்சொல்வதே சட்டமாக அமையும். ஆனால், ஆராய்ச்சி ஞானமே சிறிதும் இல்லாத சிவஞானம் தொட்டிருப்பது அப்படிப்பட்டதல்ல. பெரிய பெரிய கதாசிரியர்களே முயன்று பார்த்துவிட்டு, இது உருப்படாது என்று விட்டுவிட்ட சரக்காகும் அது.

இதுபோன்ற வரலாறுகளுக்கு மாபெரும் வெற்றி கிடைக்க வேண்டுமானால் ஒரே ஒரு வழிதான் உண்டு. வங்காளி நாவலாசிரியர்களான பக்கிம் சந்திரர், சரத் சந்திரர், ரமேஷ்சந்திர தத் போன்றவர்கள் காட்டியுள்ள வழிதான் அது. காலத்தைப் படுதாவாகக் கொண்டு கதையை நாம் நிர்ணயிப்பது. இதில் கதாசிரியரின் வேலை மிகவும் சுலபம். சரித்திர நாயகன் சரித்திரத்தை நடத்துவான்- ஒரு துணைக் கதாநாயகன் அவனை நடத்துவான். கதை துணைக் கதாநாயகன் பேரிலேயே ஓடும். அங்கங்கே சரித்திரச் சான்றுகளில் கதை வந்து ஒட்டிக்கொள்ளும். நாடக அம்சம் முழுக்க முழுக்கக் கிடைக்கும். கல்கி எழுதிய 'பொன்னியின் செல்வன்,' 'சிவகாமியின் சபதம்' 'பார்த்திபன் கனவு' அரு. ராமனாதன் எழுதிய 'ராஜ ராஜ சோழன்' முதலியவற்றை இந்த வகையில் சேர்க்க வேண்டும். வங்காளத்தில் பிறந்த 'தேவி சௌதுராணி' 'ஆனந்தமடம்', ரமேஷ்சந்திரதத்தின் 'மகாராஷ்டிர ஜீவன் உதயம்' துர்ஜேந்திரலாலின் 'நூர்ஜஹான்' நாடகம், முன்ஷியின் மிருணாலவதி, முதலியனவும் இதே கருத்தை வலியுறுத்துகின்றன. இப்படி, சரித்திரப்பாத்திரம், துணைப்பாத்திரத்தோடு சேர்ந்து உருவாக்கும் நாடகம், எந்த அம்சத்துக்கு வேண்டுமானாலும் இடம் தருகிறது. ஒன்றும் புரியாத சிவஞானம் தெரிந்துகொள்ள வேண்டியது இது.

'ஊமையன் கோட்டை' கதை கட்டபொம்மனைப் போன்ற, வரட்சி மிகுந்த வரலாறு அல்ல. வீரத்தேவன் என்ற புதிய பாத்திரத்தை மையமாகக் கொண்டு இயக்கப்படுவதாகும். நவரச பாவங்களுக்கும் இடம் தருவதாகும். கட்டபொம்மனும் இதுவும் ஒரே கதைதான் என்று உளறிக்கொட்டும் சிவஞானத்துக்கு உண்மை தெரிவதற்காக இதைச் சொல்லிவைக்கிறேன். அவர் எழுதுவதாக அவரே சொல்லிக் கொண்டிருக்கும் 'கட்டபொம்மன்' ஒரு வரலாறு. ஆனால், 'ஊமையன் கோட்டை' உணர்ச்சிகளின் நிலைக்களனோடு அமைக்கப்பெற்ற ஒரு கதை; அவ்வளவுதான்! ★

கட்டபொம்மனில் எஸ். எஸ். ஆர்.

பத்மினி பிக்சர்ஸ் தயாரிக்கும் 'கட்டபொம்மனில்' இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் அவர்கள் பாதர் வெள்ளையாக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார் என்ற செய்தி அறிந்து மகிழ்கிறோம். இலட்சிய நடிகரின் வெற்றிப்பாதை கட்டபொம்மனின் வெற்றிக்கு அடிகோலும் என்று நம்பலாம்.

கேள்விப் பெட்டி

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

எஸ். எஸ். இராதா,
மேல்மங்கலம்.

நாம் தற்போது கூறும் வள்ளுவப் பெருந்தகையின் வரலாறு எல்லாம் கற்பனை என்கிறீர்களே! அப்படியிருக்க, திருமண அழைப்பிதழ்களிலே திருவள்ளுவராண்டு 1988 என்று குறிப்பிடுகிறோமே. அந்த ஆண்டு வள்ளுவர் பிறந்த வருடமா? அல்லது "குறள்" அரங்கேறிய வருடமா? என்பதை தெளிவுடன் விளக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்?

வள்ளுவர் வரலாறாக எதுவும் நம்மிடம் கிடையாது. கதைகள்தான் உள்ளன. அவையும் கற்பனையே-மிகப் பிற்காலத்தாரின் உயர் மாபுகூட அற்ற பெருந்தரப் புளுகுக் கற்பனையே. இதனைக் கேள்வி கேட்பவர் 'வரலாறு' என்ற 'பெத்தப்பெயர்' கொடுத்துக் குறிப்பிடுவது ஏனோ?

கதையில் வள்ளுவர் காலம்பற்றிய செய்தியோ, கற்பனையோ, கற்பனையின் நிழலோகூடக் கிடையாது. ஆகவே புதிதாக அணிமையில் வழக்குக்குக் கொண்டு வரப்பட்டுள்ள வள்ளுவர் ஆண்டுக்குக் கதை காரணம் ஆகாது. கேள்வி கேட்பவர் இங்கும் ஏனோ அம்மயக்கம் மேற்கொண்டுள்ளார்.

வள்ளுவர் ஆண்டு என்பது வள்ளுவர் கால ஆராய்ச்சி அடிப்படையிலேயே கணித்துருவாக்கப்பட்டது. உண்மையில் வள்ளுவர் காலம் இதுதான் என்று இன்றுகூட முடிவுபடுத்தப்பட்டதாகக் கூறமுடியாது. ஆனால் ஊகக் கணிப்பின் மூலம் காலஞ்சென்ற ஆசிரியர் மறை மலையடிகளார் அவர் வாழ்வைக் கி. மு. ஒன்றும் நூற்றுண்டென அறுதி செய்து, அதனடிப்படையிலேயே வள்ளுவர் ஆண்டை கி. மு. 31 முதல் கணித்தெண்ணியுள்ளார். தமிழ்ப் புலவருலகின் முடிசூடா மன்னராக விளங்கிய அவர் முடிவை எல்லாத் தமிழரும் இன்றுவரை ஏற்றே அவ்வாண்டு பழக்கத்தில் வந்துள்ளது.

மேலே கூறியபடி வள்ளுவர் காலம் இன்னும்வரையறுக்கப்பட்டுவிடவில்லை என்று கருதுபவருள் நானும் ஒருவன். அவர் காலம் கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டு முற்பட்டதாயிருக்க வேண்டுமென்று ஒரு ஆண்டாகக் கருதி வருகிறேன். ஆனால் நானும் வள்ளுவராண்டை மறைமலையடிகளாகப் பின்பற்றி வழங்கியே வருகிறேன். தற்போது அதை மாற்றும் அவசியம் ஏற்படவில்லை, தமிழர்க்கு. வள்ளுவர் பெயராலேயே ஓர் ஆண்டு இருத்தல் நலம் என்றே கருதுகிறேன். அந்த ஆண்டுக் கணிப்புத் தவறானதென்று ஏற்பட்ட பின்னும்கூட, தவறான அடிப்படையிலேயே அது மறைமலையடிகளார் குறித்தவாறு வழங்குதலில் பெரும் தவறு கிடையாது. கிறிஸ்து பெருமான் கி. பி. 1-ல் பிறக்கவில்லை, கி. மு. 6-லேயே பிறந்தார் என்று இன்றைய வரலாற்றறிஞர் பலர் கருதுகின்றனர். ஆயினும் அதற்காக வழங்கிவிட்ட ஆண்டை, யாரும் மாற்றவில்லை. மாற்றினால் இன்றைய 1957-ம் ஆண்டு 1963 ஆக வேண்டும்.

வருங்காலத்தில் வள்ளுவர் ஆண்டுக்கும் வள்ளுவர் காலத்துக்கும் தொடர்பில்லை என்பது எங்கும் ஒப்புக்கொள்ளப்பட்டால், அப்போதும், வள்ளுவர் பெயர் மதிப்பின் பேரில் அது அவ்வாறே வழங்கியோ அல்லது தமிழ் ஆண்டு, மறைமலையடிகள் தமிழாண்டு என்றோ வழங்கல் பொருந்தாததன்று.

★

டி. பி. பழனிசாமி,
தொளசம்பட்டி.

"வடமொழியில் சில இடங்களில் 'ள' என்ற எழுத்தும் 'ட' என்ற எழுத்தும் ஒன்றுக்குப் பதிலொன்று வருவதால் 'த்ராவிடம்' என்பது 'த்ராவிளம்' என்று மாறிற்று. 'வ' என்பது 'ம' ஆக மாறுவதும் உண்டு. த்ராவிளம் த்ரவிளம் ஆகி பிறகு அது த்ரமிளம் ஆகி பிறகு தமிளம் ஆகி பிறகு அது தமிள் என்றும் மாறி வந்துவிட்டது"—இங்ஙனம் திராவிடம் என்ற சொல்தான் 'தமிழ்' என்று ஆகியிருக்க வேண்டுமென்று சில ஆராய்ச்சிக்காரர்கள் கூறுவது சரியா? *அல்லது*

"தமிழ் என்ற சொல் தமிழர் வைத்த பெயர்தான். தமிழ் என்ற சொல்லில் வரும் 'ழகரம்' மற்றவர்களுக்கு உச்சரிக்க வருவதில்லை, ஆகவே தமிழ் தமிளாகி, த்ரமிளம், த்ரவிடம் என்று பல அவதாரம் எடுத்தது"—என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுவது சரியா? எனவே இவைகளில் தங்களது விளக்கம் என்ன?

திராவிடம் என்ற சொல் சமஸ்கிருதத்தில் மிகப் பழமை வாய்ந்த வழக்கன்று. தமிழ் தமிழிலக்கண இலக்கியங்களிலே அதைவிடப் பழமையான வழங்குடையது. ஆகவே திராவிடர், தமிழ் ஒன்றிலிருந்து ஒன்று வந்திருக்க வேண்டும் என்று கருதுபவர் திராவிடத்திலிருந்து தமிழ் வந்ததென்று கூறுவது ஒருபோதும் பொருந்தாது. 'தமிழ்' என்பதிலிருந்தே திராவிடம் தோன்றியிருக்க இடம் உண்டு.

தவிர, திராவிடம் என்பதற்குத் திராவிளம் என்ற வடிவம் கிடையாது, வழக்கில் என்றும் இருந்ததில்லை. திரமிளம், திரமிடம் என்ற வடிவங்களே உண்டு. இவற்றுள் திராமிளமே திராமிடத்தை விட, திராவிடத்தைவிட சமஸ்கிருதவாணர் வழக்கில் பழமை வாய்ந்தது. ஆகவே இந்த அடிப்படையிலும் திராவிடம் திராமிளமாகித் தமிழாகியிருக்கமுடியாது. தமிழ் திராமிளம், திராமிடமாகி, திராவிடமாகத் திரிந்திருக்க வேண்டும்.

ள—ட, வ, ம சமஸ்கிருதத்தில் மாறுபடும் என்று சமஸ்கிருதவாணர் கூறுவது இந்தத் தென்னாடு குறித்த சொற்களில்மட்டுமே. அது தமிழ்ச் சொற்களை வருவிப்பதற்கான அவர்கள் கற்பனை என்பதில் ஐயமில்லை; ஏனெனில் தமிழில் இலக்கணத்திலேயே ல—ர மான முதலிய எழுத்து மாறுதல்கள் 'போலி' என்று வகுக்கப்பட்டிருப்பதுபோலச் சமஸ்கிருத இலக்கணத்தில் கிடையாது. பாணினி அறிந்த அத்தகைய மாறுதல் ல-ள மட்டுமே. ஆகவே சமஸ்கிருத இலக்கணப்படி வ-ம மாறுதல் ஏற்படமுடியாது. ள-ட ஏற்படும். ஆனால் இவற்றுள் ளகரமே பழமை வாய்ந்தது. ஈடே (புகழ்கிறேன்) என்ற ஆரியச் சொல் வேத காலத்திலே ஈளே என்ற வடிவத்திலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னரே ஈடே என்ற சமஸ்கிருத வடிவத்திலும் காணப் பெறுவது குறித்துக் காணத்தக்கது. ஆகவே வடவர் வழக்கில் பழய வடிவம் 'தமிழ்' என்பதற்கே அணுக்கமாயிருப்பதால், 'தமிழ்' என்பதே 'திராவிடம்' என்பதன் மூலச் சொல்லாகக்கூடும்.

கடைசியாக, 'தமிழ்' 'தமிழர்' 'தமிழினம்' 'தமிழகம்' ஆகியபெயர்கள் திராவிடம் வழங்கிய சமஸ்கிருத இலக்கிய காலத்துக்கும்புராண காலத்துக்கும் (கி. பி. 5, 3-ம் நூற்றுண்டுகளுக்கு) முற்பட்டே கிரேக்கர்கள் அறிந்து வழங்கிய பெயர்கள் ஆகும். இன்னும் முற்பட்ட சங்க இலக்கியம், தொல்காப்பியம் அறிந்த பெயர்கள் ஆகும். 'தமிழ்' என்ற சொல் தமிழினமே தன்னைக் குறுக்கச் சூட்டிய பெயரன்றி, தம் மொழிக்கும் இனத்துக்குமே தமக்கென பெயரற்றவராக இருந்த ஆரியர் சூட்டியதாக இருத்தல் முடியாது. 'ஆரியம்' 'சமஸ்கிருதம்' 'பிராகிருதம்', 'பாளி' முதலிய பெயர்கள் யாவுமே மேலை ஆரியர் அறியாதவை.

இவைமட்டுமல்ல. 'தமிழ்' 'திராவிடம்' இரண்டும் பொருள்தொடர்பும் சொல் தொடர்பும் கொண்ட சொற்களேயானாலும் ஒன்று மற்றொன்றின் திரிபு அல்ல என்று திருத்தந்தைஹீராஸ் குறிப்பிட்டது சரி என்பதே வருங்கால ஆராய்ச்சியாளரில் ஏற்கத்தக்க முடிவு ஆகும். ஏனெனில் 'திரை' மேலை நடு நிலக் கடலுலக வழக்கிலும் உண்டு. தமிழில் சங்க கால வழக்கிலும் தொண்டை நாட்டுப் பல்லவர் பெயராக வழங்கிற்று. திரு (-செல்வம்) என்பதனுடனும் அது தொடர்புடையது. தமிழினத்தவருள் நெய்தல் நிலத்தவரான 'திரையரே' கடல் கடந்து நெடுந்தொலை உலகில் பிறந்தனராதலாலும் வடதிசையிலும் அவரே முதலில் பரவியிருத்தல் கூடுமாதலாலும், தமிழினத்தவரை ஆரியர் திராவிடர் என அழைத்திருத்தல் பொருந்தும்.

திராவிடம் என்பது திரை இடம் சார்ந்ததே.

ஐகாரம் ஆகாரமாதல் தமிழ் மொழித் தொன்மை இயல்பு. நரு, துலா, புலா, குரா, நிலா முதலிய பழைய ஆகார ஈற்றுச் சொற்கள் இடைக்கால பிற்காலத்தில் நறை-நறவு, துலாம்-துலை, புலால்-புலை, நிலவு எனத் திரிபுற்றிருத்தல் காணலாம்.

இடம், இன்று பொதுச்சொல். பண்டு, அது 'தேசம்', திசை என்ற சொற்கள்போல நாட்டைக் குறித்து அச்சொற்கள்போலப் பொருள் குறுகியோ விரிவுற்றோ மாறியிருத்தல் வேண்டும். இங்ஙனமானால், இடம் என்பதும் தமிழிலுள்ள 'இழ்' என்பதும் தொடர்புடையவை. தமிழின் பழைய உருவம் 'இழ்' என்பதே. இழ்-இனிமைப் பொருள் தருவது. தமது என்ற பொருளில் தம் சேர்ந்தே அது தமிழ் ஆயிற்று. பண்டைத் தமிழர் தாய்நிலப்பகுதியான இலங்கை ஈழம் என்று பெயர் பெற்றது இதனை வலியுறுத்தும். ஈழம் (-பொன்), எல் (-ஒளி, கதிரவன்) ஆகிய சொற்களும் 'ஏலம்' என்ற பண்டை நாகரிகமிக்க கீழ்திசை இனப்பெயரும் ஒப்புக் காண்டற்குரியன.

தமிழ் இன்று மொழிப் பெயராக மட்டும் இயங்குகிறது. முன்பு அதுவே நாட்டுப் பெயராகவும் இனப்பெயராகவும் இயன்றது. ஆனால் திராவிடம் தமிழின் இம் முப்பொருளிலும் சமஸ்கிருதத்தில் வழங்கினாலும், சிறப்பாக இனப் பெயராகவே உலகெங்கும் பரந்துள்ளது. இது கடல் கடந்த பரப்பில் தமிழரில் ஒரு சாரராகிய திரையரே பேரிடம் பெற்றதன் பயனாகும். தமிழகத்தில் சங்ககாலத்திலும் அதன் பின்னும் இத்திரையர் ஆட்சிச் சிறப்பெய்தினாலும், சங்க காலத்துக்கு நெடுநாள் முன்னரே தமிழகத்தில் அவர்கள் தலைமை தளர்ந்துவிட்டது. 'அருலாளர்' என்ற அவர்கள் பெயரைத் தெலுங்கர்கள் தமிழர் பொதுப்பெயராக்கினாலும், தமிழர் அவர்கட்கு அத்தகு சிறப்புத்தர முற்படவில்லை என்னலாம். 'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்ற அணிமைக் கால வழக்குத் திரையர் சங்க காலத்துக்கு முற்பட்ட பழம் பெருமையைப் புதுப்பித்ததேயன்றி வேறன்று. பல்லவர் காலமுதல் அது தமிழக ஆட்சியில் முன்னணிக்கு வர ஆயிர ஆண்டு அரும்பாடு பட்டும் இறுதியில் அம் மரபு தமிழகத்தின் சிற்றரச மரபாகவே தேய்வுற்றது. ★

பன்மொழிப் புலவர் பொன்விழா

கண்ணதாசன் கலந்துகொள்ளும் சிறப்புக் கூட்டங்கள்

வருகின்ற சனவரித் திங்களில் ஆசிரியர் கண்ணதாசன் கலந்துகொள்ள இருக்கும் சிறப்புக் கூட்டங்களுக்குத் தேதி கேட்டு கழகத் தோழர்களிடமிருந்து கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. டிசம்பர் 15-ம் தேதிவரை கிடைக்கப் பெறும் கடிதங்களை வைத்து, தேதி கேட்டிருக்கும் (கொடுக்கப்பட்டிருக்கும் தேதிகள் நீங்கலாக) எல்லா ஊர்களுக்கும் தேதி கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். கடிதம் எழுதியிருக்கும் தோழர்கள் கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். தேதி டிசம்பர் மூன்றாவது வாரத்தில் அறிவிக்கப்படும்.



7. சாதியினுல் தோன்றும் தடை.

''நாட்டின் மொழிகாக்க நாளைக்குப் போர்''என்றேன்
''வீட்டில் இரும்''என்ருள்; மீறினேன்—வாட்டமுடன்
வீதிக் கதவடைத்தாள்; வெந்தாள்; இதுஎன்பெண்
சாதியினுல் தோன்றும் தடை!

—சா. ரிச்சர்ட் லேட், நாமக்கல்.

❁

செந்தேன் குறளும், சிலம்பும், புறப்பாட்டும்,
சிந்தா மணியும் சிறந்தறிந்தே—சிந்துபுகழ்
ஆதித் தமிழ்மாந்தர் அன்றறியார் தீச்செயலாம்
சாதியினுல் தோன்றும் தடை.

—ச. குருசாமி, விருதை.

❁

''பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்'' என்றவனை அன்று
பிறப்பித்த பொன்னுடே! பின்ஏன்—நிறப்பித்துச்
சூதரை நீபடைத்தாய்? சுட்டெரிப்பாய் உன்னுட்டில்
சாதியினுல் தோன்றும் தடை!

—'வள்ளுவன்வழியான்', பிள்ளையார்புரம்.

❁

நாட்டுநலம்; மேலான நல்லறிஞர் கூட்டுறவால்
ஈட்டுபுகழ்; வாய்மை; இசையோடு—நாட்டங்கொள்
காதல்; கலை;வாழ்வு; கல்வி அனைத்துக்கும்
சாதியினுல் தோன்றும் தடை.

—கும்பகோணத்தான், வசந்தபுரம்.

❁

தேனூர் தமிழ்க்கடலுள் சிந்திக்கும் பாவலர்போல்
ஆனும் உளமொன்ருய்; அஞ்சாதோ —பூநாறும்
கோதாய்!நம் காதலெனும் கோளரிமுன் சிற்றெலியாம்
சாதியினுல் தோன்றும் தடை!

—செந்தமிழரசன், பண்ணைக்காடு.

❁

சொன்ன மொழிசுவைக்கச் சொற்கனிகள் தானுதிர்க்கும்
பண்கவியும், கோமகளும் பாசமுடன்—தன்காதல்
ஓதி, உயிரிணைந்தார், உன்மத்தர், தானழித்தார்;
சாதியினுல் தோன்றும் தடை.

—மு. பா. வி. இளம்பரிதி, கரூர்.

❁

ஒட்டுமா வென்ருல் உருசியென்பர்; நற்காதல்
ஒட்டிவாழ் வேறினத்தோர் வாழ்வுதனை—எட்டியென்பர்
நாதியற்றுப் போகாதோ! நட்டாற்றில் செல்லாதோ!
சாதியினுல் தோன்றும் தடை.

—அரூர்செல்வன், அரூர்.

❁

நீளும் படுஇடரும் நெஞ்சுருக்கும் வெஞ்சமரும்
வாழ வழியளித்து வள்ளலாய்—ஆள்வோர்தம்
சாதனைகள் அத்தனைக்கும் சாகாமல் பொங்குதையோ
சாதியினுல் தோன்றும் தடை.

—குளிரெழிலன், சாலைப்புதூர்.

❁

முத்துச் சுடரே முழுநிலவே தாழ்ந்தவள்நீ
இத்தரையில் என்றே இயம்பிடினும்-மெத்தவும்நான்
காதலித்தேன்; கைவிடேன்; கண்ணேநம் முன்வருமோ
சாதியினுல் தோன்றும் தடை!

—மு. வெங்கடேசன், துறையூர்.

❁

கள்ளே! எனதருமைக் காவியமே! உன்னன்பால்
உள்ளம் வெதும்பி உருக்குலைந்தேன்-கூடிடுவோம்
ஆதியே வந்தாலும் அஞ்சோம்நாம்! என்செய்யும்
சாதியினுல் தோன்றும் தடை.

—ச. இராசாமணி, மதுரை.

NEWS COMPANY
23, ...
Perumal Street,
MADRAS.

மோனக் கடலினிலே மூழ்கிநன் முத்தெடுத்துப்
பானைக்குள் மூடிப் பதுக்குவரோ?-வானுயர்ந்த
நீதித் தமிழகத்தை மூடிற்றே நச்சரவுச்
சாதியினுல் தோன்றும் தடை.

—கு. சித்தா, கலிதீர்த்த...

❁

பெற்ருர் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்ருர் உகந்தார் உறுமுகின்ருர்-பொற்கொடியே
காதலின்பம் சாக்காட்டில் காண்போம்வா! இத்தரையில்
சாதியினுல் தோன்றும் தடை.

—பரளித்தம்பி, பரளி.

❁

காதலுக்கு வாழ்வில்லை கற்பகமே! சாதிமத
பேதத்தால் என்தந்தை பேசுகிருர்—சாதலன்றி
ஏதினிமேல் வேறுவழி? இவ்வளவும் பாழான
சாதியினுல் தோன்றும் தடை.

—இரா. துரை, சென்னை-30.

❁

காதலியைச் சாதியெனும் கத்தியொரு முத்தமிட,
மாதவளுஞ் சோலையிலே மாண்டனளே!—பேதமிலா
நீதி கிடைக்குமோ? நீங்குமோ, காதலுக்குச்
சாதியினுல் தோன்றும் தடை?

—டி. வி. பச்சையப்பன், மதுரை.

❁

துப்பாக்கி ஏந்தும் துரைத்தனமே! உன்னிடத்தில்
துப்பில்லை சாதித் துயர்துடைக்க;—நல்லாட்சி
தீதின்றிப் பெற்ருல் திமுக ஒழித்திடுமே
சாதியினுல் தோன்றும் தடை.

—பே. சா. தனராசு, நாமக்கல்.

❁

''காதல் இளஞ்சிட்டே! கானகத்து மாமயிலே!
சாதல் தனைவேண்டாச் செண்பகமே!-மாதரசி!
தீது புரிவதிலே தீவிடத்தின் மீக்கொடிதாம்
சாதியினுல் தோன்றும் தடை.

—சுப. சேரலாதன், கரந்தை.

❁

கூண்டுக் கிளிசிறகைக் கொண்டிருந்தும் யாதுபயன்?
தூண்டில்மீன் துள்ளியென்? தொல்குறளால்-நீண்டபுகழ்
சாதித்தும் நம்நாடு சாந்தியுற்று முன்னேறச்
சாதியினுல் தோன்றும் தடை.

—'இராயகிரியான்', காட்டுப்புது

❁

'மண்ணுலகில் மக்களெலாம் ஓர்குலம்தான் வேறில்லை'
எண்ணிடுவீர் நன்ருக இக்கருத்தை!—திண்மையிலா
ஆதிமறை ஓதும் அந்தணரால் வந்ததன்ரே
சாதியினுல் தோன்றும் தடை!

—பொ. ந. கலியபெருமாள், வடலூர்

❁

கல்வி யறிவழகு காலமெலாம் பேரன்பு
செல்வந் தனைப்பெற்றுச் சேர்ந்தபினும்—உள்ளமிகு
காதல் இருவரிடைக் காசினியில் என்செய்யும்
சாதியினுல் தோன்றும் தடை?

—மொழியன்பன், இன்முர்.

❁

ஓதியுடல் பேணும் உத்தமர்க்கு நற்றெழில்கள்
ஓதியே காட்டிடினும் ஓடாதோ—வாதித்து
நாதியற்ரே ராக நமையழிக்கும் பாழான
சாதியினுல் தோன்றும் தடை.

—ப. நடராசன், திருப்பூர்.

❁

உள்ளத்தால் ஒன்றியவர் ஊரறிய வாழ்ந்திடினும்
மெள்ள நமதினத்தார் மேற்பதவி—கொள்ளிடினும்
வேதியர் கூட்டமெனும் வீணர் வகுத்திட்ட
சாதியினுல் தோன்றும் தடை.

—''அல்லி'', சென்னை.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணுசலம், ஏ.எல்.எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நா